Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 21 சனிக்கிழமை (04.05.2013) பக்கங்கள் 20 ஓசை – 216



சீசன் ஆரம்பம் (07)



தாளம் கேட்க ஒரு சட்டை (10)



அம்மாவும் சம்மதம் (11)



தீர்மானம் (17)



வறுமை! (18)

# தீவகத்தின் அபிவிருத்திக்கு 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

தீவகத்தின் அபிவிருத்தியை மேம்படுத்தும் முகமாக 300 மில்லியன் ரூபா செலவில் புதிய செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆட்சிப்பொறுப்பில் உள்ள வேலணை, ஊர்காவற்றுறை, மற்றும் நெடுந்தீவு பிரதேச சபைகளுக்கு அரசாங்கத்தின் விசேட நிதியில் இருந்து ஒவ்வொரு சபைகளுக்கும் தலா 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்குவதாக ஏற்கனவே இணக்கம் காணப்பட்டிருந்தது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கடந்த தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் விடுத்த கோரிக்கைக்கு இணங்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அதற்கான நிதி ஒதுக்கீட்டினை வழங்குவதாக இணக்கம் தெரிவித்திருந்தார்.

இதன்படி, மூன்று சபைகளுக்குமான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு குறித்த பிரதேச சபைகளின் அபிவிருத்திப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

## உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் 5 ஆம் திகதி

(கொழும்பு)

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

உயர்தரப் பரீட்சையை ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பித்து 31 ஆம் திகதி வரை நடத்த திட்டமிட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை புலமைப்பரிசில் பரீட்சையை ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மீன்பிடி வலை உற்பத்திக்கு இந்திய உதவியுடன் உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடற்றொழில் அபிவிருத்தியை மேம்படுத்தும் முகமாக மீன்பிடி வலை உற்பத்தி செய்யும் உபகரணங்களை வழங்குவதற்கு இந்திய அரசு முன்வந்துள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் அமைந்துள்ள வடகடல் நிறுவனத்தின் அபிவிருத்தி மற்றும் விரிவுபடுத்தல் செயற்திட்டத்தின் கீழ் குருநகர் மீன்பிடி வலை உற்பத்தி தொழிற்சாலையின் ஆற்றல் மற்றும் விரிவுபடுத்தல் செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டு அவை தொடர்பான உபகரணங்களை கையளிக்கும் வைபவம் எதிர்வரும் 6 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறும் இவ் உபகரண கையளிப்பு நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தாவும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் ஏனைய முக்கிய பல பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

குருநகர் மீன்பிடி வலை உற்பத்தி நிறுவனம் யுத்தசூழ்நிலைகள் காரணமாக சேதமடைந்து காணப்பட்டது. பின்னர் 2006 ஆம் ஆண்டு மீண்டும் இதன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் வீழ்த்திய விமானம் மீட்புப் பணி ஆரம்பம்




(கொழும்பு)

14 வருடங்களுக்கு முன் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் சுட்டு வீழ்த்தப்பட்ட லயன் எயார் உள்நாட்டு பயணிகள் விமானத்தின் நொருங்கிய பகுதிகளை கரைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. வடபகுதி கடற்பரப்பின் இரணைதீவுக்கு அண்மையில் கடலுக்கு அடியில் இந்த விமானத்தின் பாகங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவற்றை கரைக்கு எடுத்துச்செல்வதற்கான நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய தொல்பொருள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## விடைபெறுகிறார் இந்தியத் தூதுவர்



(கொழும்பு)

பிரியாவிடை பெற்றுச் செல்லும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தாவுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார். கொழும்பிலுள்ள அலரிமாளிகையில் நேற்றைய தினம் நடைபெற்ற பிரியாவிடை நிகழ்வில் அமைச்சர் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக பதவி வகித்த அசோக் கே காந்தா, இந்திய வெளிவிவகார அமைச்சின் கிழக்கு ஆசியப் பிரிவிற்கான செயலாளராக இந்திய அரசால் நியமனம் பெற்று பதவியுயர்வு

(19) ஆம் பக்கம் பார்க்க

உள்ளே...
தரம் 10 இற்கான விஞ்ஞானம்

## அசாத் சாலி மருத்துவமனையில்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் தமிழ், முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான அசாத் சாலி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுகயீனம் காரணமாக அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## காசோலை மோசடி அதிகம் யாழ். பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

காசோலைகளைப் பயன்படுத்தி 64 இலட்சம் ரூபா மோசடி செய்தமை தொடர்பில் ஐந்து முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக நேற்று இடம்பெற்ற வாராந்த பத்திரிகையாளர் சந்திப்பில் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பரமேஸ்வராச் சந்திப் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் வாகனம் பெற்றுத்தருவதாகக் கூறி 49 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா காசோலை மோசடி செய்த சந்தேகநபர் தொடர்பில் பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் சந்தேகநபர் தலைமறைவாகியிருப்பதாகவும் தெரிவித்த அவர், பிறவுண் வீதியைச் சேர்ந்த ஒருவரிடம் ஐந்து இலட்சம் ரூபாவை காசோலை கொடுத்து மோசடி

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் கட்சிகளுடன் தேர்தல் ஆணையாளர் சந்திப்பு


(கொழும்பு)

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் தேர்தல்கள் ஆணையாளருக்கும் இடையேயான முக்கிய சந்திப்பொன்று நேற்று மாலை தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெற்றது. 2013 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியல் தயாரிப்பு உட்பட வடக்கு மாகாணத் தேர்தல் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது உத்தேச வட மாகாண தேர்தலுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தொடர்பான பிரச்சினைகள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா வடக்கில் தேர்தல் ஒன்று நடைபெறுமானால் சர்வதேச கண்காணிப்பாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட

(19) ஆம் பக்கம் பார்க்க

பக்கம் 02 இல்...
அபிவிருத்தி லொத்தர் சபையின் ஜயோதா உத்தியோகபூர்வ முடிவுகள்





இலங்கை பத்திரிகை முறைபீட்டு ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் நேற்று ரயில் நிலைய வீதி 117ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது. இதில் முறைபீட்டு ஆணைக்குழுவின் அதிகாரிகள் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட எஸ்.பி.சாமி, நாடாவெட்டி அலுவலகத்தை திறந்து வைப்பதையும், இந்நிகழ்வில் கலந்து கொண்ட அதிகாரிகளையும் காணலாம். (படங்கள் ஆர்.இராஜகுமார்)

# சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் மானிப்பாய் பொலிஸ் பிரிவு

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் சட்டமும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பணிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இங்கு பாலியல் துஷ்பிரயோகங்கள், குடும்பப் பிரச்சினைகள் கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் பற்றியே மக்களால் அதிகளவு முறைப்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது. காணி தொடர்பான பிரச்சினைகள் இணக்கமன்றுக்கும் அனுப்பிவைக்கப்படுகின்றன.

இச் சம்பவங்களை உடனுக்குடன் விசாரணை செய்து அதற்கான தீர்ப்புக்களும் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனைவிட மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணியாது செல்வோர், வாகன அனுமதிப் பத்திரங்கள் இன்றி செல்பவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக பாடசாலைக்கு பிள்ளைகளை ஏற்றிச் செல்லும் பெற்றோர் தலைக்கவசம் அணியாது ஏற்றிச் செல்வதால் விபத்துக்கள் நடக்கும் வேளையில் பிள்ளைகளே கூடுதலாக பாதிக்கப்படுகின்றார்கள். எனவே இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும் இதனை மீறுவோர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படுமென்று சிறுகுற்றப்பிரிவு தடுப்பு அதிகாரி கே.எக்ஸ்.ஆனந்த தெரிவித்துள்ளார்.

# குறும்பட வெளியீட்டு விழா

முழங்காவில் அன்பு ஐக்கிய கலா மன்றத்தின் குறும்பட வெளியீட்டு விழாவும் கலாசார விளையாட்டுப்போட்டியும் இன்று காலை 8 மணிதொடக்கம் அன்பு ஐக்கிய விளையாட்டு கழகமைதானத்தில் நடைபெறவுள்ளது.

கலாமன்றத்தலைவர் சி.யுசிந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமாரும் கிளி.மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனும் பிரதம விருந்தினராகவும் பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர். (112)

# நிர்ப்பந்திக்கப்பட்ட கல்விமுறைமைக்கு கிராமப்புறங்களில் முற்றுப்புள்ளி



(கிளிநொச்சி)

நகருக்கு அப்பால் உள்ள பாடசாலைகளில் இன்று கணித, விஞ்ஞானப் பரிவுகள் ஆரம்பிக்கப்பட்டதனூடாக அப்பகுதிகளில் நிலவிவந்த நிர்ப்பந்திக்கப்பட்ட கல்விமுறைமைகள் மாற்றப்பட்டுள்ளன என ஈ.பி.டி.பி யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுககளின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார். அக்கராயன் மகாவித்தியாலயம் மற்றும் கிளிநொச்சி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நேற்று க.பொ.த. உயர்தரத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளை, ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், கணித, விஞ்ஞானப் பிரிவுகளை கிராமப்புற பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டதனூடாக இப் பகுதிகளில் நிலவிவந்த நிர்ப்பந்திக்கப்பட்ட கல்விமுறைமைகள் மாற்றப்பட்டுள்ளன. அதாவது கடந்த காலங்களில் க.பொ.த உயர்தரத்தில் அதி விசேட சித்திகளை பெற்ற கிராமப்புற மாணவர்கள் பலர் தமது பிரதேசங்களில் கணித, விஞ்ஞானப் பாடங்களை கற்பதற்கான வசதிகள் இல்லாத காரணத்தால் கலை, வர்த்தகப் பாடங்களைக் கற்பதற்கு இயல்பாகவே நிர்ப்பந் திக்கப்பட்டிருந்தனர். ஆனால் இவ்வருடம் கிராமப்புற மாணவர்களும் கல்வியில் மேம்பட வேண்டும் என்ற கொள்கைக்க. மைவாக செயற்பட்டு கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய பாடசாலைகளை தெரிவு செய்து கணித விஞ்ஞானப்பிரிவுகளை ஆரம்பித்துள்ளோம் என்றார்.

கிளி.அக்கராயன் மகாவித்தியாலயத்தில் கணித விஞ்ஞானப் பாடப் பிரிவுகளை ஆரம்பித்து வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மேலும், கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும் குறித்த பிரிவுகளை ஆரம்பித்துவைத்தார். இந்நிகழ்வுகளில் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் முருகவேல், வவுனியா மாவட்ட பிரதிபிராந்திய சுகாதாரவைத்திய அதிகாரி வைத்தியர் சத்தியமூர்த்தி கரைச்சிக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அமிர்தலிங்கம், ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன் கரைச்சி பிரதேசசபையின் உறுப்பினர் சபாநாயகம், அக்கராயன் மகாவித்தியாலய அதிபர் மதுரநாயகம், கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் பங்கயச்செல்வன்ஆகியோரும் மற்றும் கல்வித்திணைக்கள அதிகாரிகள், அயற் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர், பெற்றோர், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சிகை ஒப்பனையாளர் ஒன்றியம் யாழ்.மாவட்டத்தில் அமைக்க ஏற்பாடு

(குருநகர்)

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வு யாழ். கிளைச் சங்கத் தவிசாளர் கணபதிப்பிள்ளை ஸ்ரீராஜன் தலைமையில் எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் ஆணையாளர் பிரணவநாதன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) யாழ். மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) ஆகியோர் கலந்து சிறப்பிப்பார்கள்.

அன்றையதினம் மாவட்டம் அடங்கிலும் இயங்கும் சிகை ஒப்பனை நிலையங்களை மூடி அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (68)

# டெங்கு அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது இடைஇடையே பெய்து வரும் மழைகாரணமாக டெங்கு நோயின் தாக்கம் பல பகுதிகளிலும் மீளவும் அதிகரிக்கும் சாத்தியங்கள் தென்படுவதாக சுகாதாரப பகுதியினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் மழைபெய்து வருகின்றது. இவ்வாறு பெய்யும் மழை காரணமாக மழைநீர் ஆங்காங்கே தேங்கி நின்று டெங்கு நுளம்புப்பெருக்கத்திற்கு ஏதுவாக அமையும் என்றும் தெரிவித்துள்ள சுகாதாரப் பகுதியினர். யாழ். நகரிலும் ஏனைய பகுதிகளிலும் மக்கள் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான காரணிகளை அழித்தும் அப்புறப்படுத்துவதன் மூலமும் டெங்கு நுளம்புப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யாழ். போதனாவைத்தியசாலையில் நேற்று முன்தினம் இருவர் டெங்கு நோய்த்தொற்றிற்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்தே இவர்கள் இருவரும் இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளனர். (பா)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 952
திகதி 02.05.2013

வெற்றி எண்கள் / ஆங்கில எழுத்து
07 45 46 50 J

ஜக்பொட் பரிசு ரூ. 10,524,900/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 10,524,900/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 2 | 10,00,000/= | ரூ. 2,000,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 50,000/= | ரூ. 500,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 275 | 1,000/= | ரூ. 275,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 500 | 1,000/= | ரூ. 500,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11810 | 60/= | ரூ. 708,600/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6092 | 40/= | ரூ. 243,680/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 155575 | 20/= | ரூ. 3,111,500/= |
| ஆங்கில எழுத்து | 22619 | 20/= | ரூ. 452,380/= |
| | | மொத்தம் ரூ. | 7,791,160/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 704094040-4-14 |
| மாத்தளை | 704083317-9-09 |
| நுவரெலியா | 704084045-5-35 |
| திருக்கோணாமலை | 704085741-4-44 |
| பொலன்னறுவை | 704088293-2-42 |
| பதுளை | 704085163-0-40 |
| கொழும்பு | 704096034-3-03 |
| கேகாலை | 704089845-4-44 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.8,191,160/=
எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 10,828,780/=
மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.05.06 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
கொழும்பு 02.
(C/2704)

# சரியான வழிமுறையின் ஊடாகவே உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்



## ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் மேதின உரை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு அனைத்து உரிமைகளும் கிடைக்க வேண்டும். ஆனால் அதைப் பெறுகின்ற வழிமுறைதான் சரியானதாக இருக்கவேண்டும். கடந்த காலத்தில் பல வழிமுறைகள் இருந்தது. அவற்றுள் ஆயுத வழிமுறை என்பது 1987 உடனேயே முடிவிற்கு கொணடு வரப்பட்டிருக்கவேண்டும்.

ஆனால் இது 2009 உடன் முடிவிற்கு வந்துள்ளது என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன்(கமல்) தெரிவித்தார்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற 2013 ஆம் ஆண்டு மே தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மேதின நாள், 'பூட்டப்பட்ட விலங்குகள் உடைக்கப்பட்ட நாள்', இத்தினத்தில் உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, ஊமைகளாய் அடங்கிக்கிடந்த தொழிலாளர்கள் தமது அடிமைத் தளையை அறுத்தெறிந்த நாள். அடக்குமுறை, கொடுமைகளைக் கண்டு உரங்கொண்டு போராடிய வீரவரலாறு கொண்ட நாள்.

தொழிலாளர் வர்க்கம் 8 மணிநேர வேலைக்கான ஊதியம் கேட்டு தமது கொடுமையான அடக்குமுறைகளை துடைத்தெறிய போராடிய இந்நாளில் நாம் அனைவரும் ஒன்று கூடுவது மிகவும் மகிழ்ச்சியானது. அவர்கள் இரத்தம் சிந்திப்போராடியதன் விளைவே அவர்களை வெற்றிப்பாதைக்கு இட்டுச்சென்றது.

கண்ணீரையும், செந்நீரையும் சிந்திய தேசம் இது. எங்கள் மக்கள் சிந்திய இரத்தமும், கொடுத்த உயிர்விலைகளும் வீணாகிப் போய்விடாது. எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நடைமுறைக்குச் சாத்தியமான வழிமுறை மூலமே எமது மக்கள் தமது சொந்த வாழிடங்களில் சுதந்திரமாக வாழ்வதற்கான சூழலை உருவாக்க முடியும்.

எம்தேசமக்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் வலி சுமந்தவர்களாக இருக்கின்றார்கள்.

இன்றைய தினத்தில் நாம் அனைவரும் உறுதிபூணவேண்டும். நடைமுறைக்குச் சாத்தியமான வழியில் செல்லும் எமது அமைப்பா? அல்லது சொந்த மககளையே நட்டாற்றில், நந்திக் கடலோரம் தவிக்கவிட்டுச் சென்றவர்களின் ஊதுகுழல்களாக தம்மைக் கூறிக்கொள்ளும் தவறானவர்களையா? என்பதை மக்கள் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்.

கடந்த காலத்தில் நல்ல பல சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் அச்சந்தர்ப்பங்களை சரியான வகையில் பயன்படுத்தவில்லை. இப்போதும் கூட மக்களை உசுப்பேத்துவதன் ஊடாகவே அவர்களது பயணம் சென்று கொண்டிருக்கின்றது. ஆனால் நிகழ்காலத்திலும் சரி - எதிர்காலத்திலும் சரி எமது மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் எனபதே எமது அவாவாகவுள்ளது.

அமெரிக்கத் தொழிலாளர்கள் சிக்காகோவில் சிந்திய இரத்தம் அவர்களிற்கு வெற்றியைத் தேடித்தந்தது. அதேபோல எமது மக்கள் - எமது தேசத்தில் சிந்திய இரத்தமும், கொடுத்த உயிர் விலைகளுக்கும் நாம் மதிப்பளிப்பவர்களாக இருந்தால், எமது மக்கள் சுதந்திரமாக வாழவேண்டுமென்றால் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் ஓர் அணிதிரள வேண்டும்.

எமக்கென்று ஒரு கொடி உள்ளது - எமக்கென்று ஒரு கொள்கை உள்ளது எதற்காகவும் நாம் எமது கொள்கையை மாற்றுபவர்கள் இல்லை. நாம் எதைக் கூறினோமோ அதுவே நடந்தது. எதைக் கூறுகின்றோமோ அதுவே நடக்கும். எனவே வர இருக்கும் சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். எங்களது எதிர்கால சந்ததியினர் நல்லதொரு சூழலை உருவாக்க வேண்டும் எமது தமிழ் பேசும் சந்ததிக்கு நல்லதொரு தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

மக்களை உசுப்பேத்தி - தவறான வழியில் வழிநடத்தி - பழி வாங்கும் எண்ணத்தோடு துடிப்பவர்கள், உங்களைப் பலிக்கடா ஆக்க நினைப்பவர்களுடன் கூட்டுச்சேராதீர்கள். நடைமுறைச் சாத்தியமான வகையில் மக்களின் உரிமையினை வென்றெடுக்கக்கூடிய சக்தியோடு அணிதிரளுங்கள். தொடர்ந்தும் நாம் முடக்கப்பட்ட சமூகமாக - தோற்றுப்போன சமூகமாக இருக்க முடியாது. எனவே ஒன்றுபடுங்கள் உரிமையினை வென்றெடுப்போம். என்றார்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிட இருவழிப்பாதை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கிச் சிசிக்சை பெற்று வரும் நோயாளர்களைப் பார்வையிட வருபவர்களின் நன்மை கருதி அவர்கள் வைத்தியசாலைக்குள் சென்று வருவது தொடர்பில் இரு வழிப்பாதை ஒழுங்குகள் குறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே, யாழ். போதனா வைத்தியசாலையின் நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் யாழ். விக்டோரியா வீதியில் உள்ள வைத்தியசாலையின் பின்பக்க வாயிலையே பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் அந்தப் பாதை யூடாக அவர்கள் பயணிப்பதில் உள்ள மேலதிக சிரமங்களைப் போக்கும் முகமாக இவ் வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவின் முன் பாகவுள்ள இரண்டாவது வாயில் ஊடாகவும், நோயாளர்களைப் 'பார்வை யிட வருவோர் வைத்தியசாலைக்குள் சென்றுவர அனுமதிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த முதலாம் திகதி முதல் இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இதன் மூலமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நோயாளரைப் பார்வையிட வருபவர்களில் மாணவர்கள் மற்றும் வயோதிபர்கள் முன்பக்க வாயிலையும், வாகனங்களில் வருபவர்கள் விக்டோரியா வீதியில் உள்ள வாயிலையும் பயன்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# பல ஆண்டுகளாக திருத்தப்படாத பாழடைந்த வாய்க்கால்

(திருநெல்வேலி)



கல்வியங்காடு சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியில் யாழ்ப்பாணம், செல்லும் பக்கமாக, வீதியின் மேற்குக் கரையோரமாகக் காணப்படும் மழை வெள்ளம் வழிந்தோடும் நீண்ட வாய்க்கால் பல ஆண்டுகளாகத் திருத்தப்படாமல் தொடர்ந்தும் பாழடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

இவ் வாய்க்காலைத் தொடர்ந்து பல வரத்தக நிலையங்கள் இருப்பதினால் அதிகளவிலான பொதுமக்கள் உடைந்துபோன வாய்க்கால் மூடிகளைத் தாண்டியே தமது தேவைகளுக்காக வர்த்தக நிலையங்களுக்குச் சென்றுவர வேண்டியுள்ளது.

இவ்வாய்க்காலுக்கு மேலாகப் பாதுகாப்பான மூடிகள் போடுவதற்கோ வாய்க்காலைத் துப்புரவாக்கி அதனை ஆழமாக்கி வெள்ளம் வழிந்தோடுவதற்கான எந்த முயற்சியும் பல வருடங்களாக எவராலும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பொதுமக்களினால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையோ, நல்லூர் பிரதேச சபையோ, வீதி அபிவிருத்தி. அதிகார சபையோ வீதி அபிவிருத்தித் திணைக்களமோ இது காலவரையில் இவ் வாய்க்கால்ப் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை என இப்பகுதி மக்களினால் பெரிதும் விசனம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (137)

# பொதுச்சந்தையை அமைக்க நாயாறு மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள செம்மலை கிழக்கு நாயாறு கிராமத்தில் கடற்றொழிலை மேற்கொள்ளும் மக்கள் தமது பிரதேசத்தில் பொதுச் சந்தையொன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை ஒன்றை வைத்துள்ளனர்.

இக்கிராமத்தில் 84 குடும்பங்கள் மீள்குடியமர்ந்து மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில் விற்பனை நடவடிக்கைகளுக்காக தாம் 10 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளதாகவும் இதனால், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறி வாழ்வாதார ரீதியாக மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வரும் தமக்கு இப்பிரதேசத்தில் பொதுச் சந்தையொன்று அமைக்கப்படுமிடத்து தாம் இலகுவாக விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கும் மீனவ குடும்பங்கள் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# துணுக்காய் வலய மட்ட தமிழ்த்தினப் போட்டிமுடிவுகள்

(துணுக்காய்)

துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற வலய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதல்மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**பாவோதல்**

**பிரிவு 03**

ப.டயந்தா(மு.மாங்குளம் ம.வித்தி), வே.டிலக்சிகா (மு.யோகபுரம் ம.வித்தி).

**பிரிவு 04**

தே.சுகிர்தா(மு.மாங்குளம் ம.வித்தி), இ.மேதுஜா (மு.ஜயனகன்குளம் அ.த.க பாடசாலை).

**பிரிவு 05**

ச.சுமேதா (மு.மல்லாவி மத்திய கல்லூரி), அ.புனிதா (மு.மாங்குளம் ம.வித்தி).

**இசையும் அசைவும்**

**பிரிவு 01**

யே.டினோஜா(மு.ஆறுமுகம் வித்தி), க.லகிதா (மு.தேறாங்கண்டல் அ.த.க பாடசாலை),சி.பிறேமிகா (மு.பனங்காமம் மூன்று முறிப்பு அ.த.க பாடசாலை).

**இசை தனி**

**பிரிவு 02**

பி.இனியவன் (மு.தேறாங்கண்டல் அ.த.க பாடசாலை), சி.ஸ்ரீதரன் (மு.கற்சிலைமடு அ.த.க பாடசாலை).

**பிரிவு 03**

சி.தர்மிதா(மு.கற்சிலைமடு அ.த.க பாடசாலை), த.நிவேதா (மு,மல்லாவி மத்திய கல்லூரி), கா.ஜெயதிலீபன் (மு.பாலிநகர் ம.வித்தி).

**பிரிவு 04**

இ.மேரிபிரியங்கா (மு.மாங்குளம் ம.வித்தி), பா.பவிதா (மு.பாண்டியன்குளம் ம. வித்தி), ம.மதுரா (மு.தேறாங்கணடல் அ.த.க பாடசாலை), க.கம்சினி (மு.ஒட்டுசுட்டான் ம.வி).

# முதலாம் ஆண்டு நிறைவு விழா

(வடமராட்சி)

நெல்லியடி நேஷன்ஸ் றஸ்ற் வங்கியின் முதலாவது ஆண்டு நிறைவு விழா வங்கி மண்டபத்தில் நெல்லியடி நேஷன்ஸ் றஸ்ற் வங்கி முகாமையாளர் ரோகான் தேவராஜா தலைமையில் நடைபெற்றது.

விழாவை இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். பாஸ்கரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

விழாவில் நஷன்ஸ் றஸ்ற் வங்கியின் வலய முகாமையாளர் எஸ்விமலநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

வங்கியில் சிறுவர் கணக்கைப் பேணும் சிறுவனொருவனுக்கு துவிச்சக்கரவண்டியொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

வாடிக்கையாளர்கள் புதிய கணக்குகள் ஆரம்பிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (01)

நல்லதையே நினைத்து நல்லதையே செய்யுங்கள்.
- சுவாமிஜி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## பதவியைப் பாதுகாக்கும் உதவி!

முப்பதாண்டுகளாகத் தொலைத்த வாழ்வு இன்னும் முழுதாக மீளவில்லை. குந்தக் குடிலற்று, நல்ல உடுதுணிகள் அற்று, வேலைவாய்ப்புகள் அற்று, சிறார்க்குத் தகுந்த கல்வி வழங்க வசதியற்று, ஊனங்களுடனும், உறக்கமற்ற இரவுகளுடனும் இன்னும் ஏராளம் தமிழ் மக்கள் ஏக்கத்துடனிருக்கிறார்கள்.

புலம்பெயர்ந்து வசதிபடைத்த நாடுகளுக்குச் செல்ல முடிந்தவர்களும், அவர்கள் அனுப்பும் பணத்தில் உண்டு ஏப்பம் விட்டு விட்டு இங்கு அரசியல் பேசுபவர்களும், கஷ்டங்களிலிருந்து 'சுழிக்க'த் தெரிந்த மேட்டுக்குடியினரும் புளிப்புக் கதைகளைப் பேசியபடி, இங்கே அல்லல்படும் மக்களைத் தொடர்ந்தும் வதைகளுடனேயே அவதியுற விட்டு அதைத் தமிழ்வீரம் தமிழ்ரோசம் என்பதாய்ப் பேய்க்காட்டி வருகிறார்கள்.

மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பேசப் போவதாகவும், வெளிநாடுகளின் மூலம் அரசை இணங்க வைக்கப் போவதாகவும் நடந்து முடிந்த் தேர்தல்களில் மக்களுக்கு வாக்குறுதியளித்து வாக்குகளை வாங்கிச் சென்றவர்கள், பேச்சுவார்த்தை–தீர்வு பற்றிய எந்த முன்முயற்சிகளுமின்றி கம்மென்றிருக்கிறார்கள். அந்த முயற்சிகளை அரசு செய்ய வேண்டும் அல்லது பான் கீ மூனோ நவநீதம்பிள்ளையோ அல்லது அமெரிக்க அதிகாரிகள் யாருமோதான் யோசித்துச் செய்யவேண்டுமே தவிர, இவர்களது கடமை அந்த முயற்சிகளுக்கு மறுப்பைச் சொல்லிக் கொண்டிருப்பதுதான் அல்லது இந்த அரசு சரிவராது என்ற கண்டுபிடிப்பை சொல்லிவிட்டுப் பேசாமலிருப்பதுதான் என்றொரு வாலாயத்தை ஏமாந்த தமிழ் மக்களிடம் உருவாக்கி விட்டார்கள்.

இனி வடக்கு மாகாண தேர்தலுக்கான நாளை அறிவித்தவுடன்தான், சுறுசுறுப்படைந்து அதே பழைய வசனங்களுடன் ஊரூராய் வரப்போகிறார்கள். தீர்வு சரிவராது, அதாவது சமஷ்டி, சுயநிர்ணயத்துக்கெல்லாம் அவர்கள் சரிவர மாட்டார்கள், ஆகவே மக்களே மேலும் 'கஷ்டப்படுங்கள், சுடச் சுடத்தான் தங்கம் மெருகு பெறும்... அப்படியே சர்வதேச நெருக்குதலில் தீர்வும் வரும் என்றவாறாக உணர்ச்சிகரக் கதைகளுடன் களமிறங்குவார்கள்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கும் செல்லாமல், வேறு பேச்சுப் பேசுவதற்கும் ஒரு முனைப்பும் எடுக்காமல் (அதுக்கு முயற்சி எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பெல்லோ... அவர்களுக்குத்தானே நோவும் வலியும்!) இப்படி இழுத்துக் கொண்டே அடுத்த தேர்தலுக்குப் போய்விட்டால் போதும் என்பதைத் தவிர இவர்கள் நினைப்பில் வேறொன்றுமில்லை.

உண்மையில், நடைமுறைச் சாத்தியங்களை உணர்ந்து பேச வேண்டியதும் அதனால் பிரச்சினைகள் தீர வேண்டியதும் சாதாரண தமிழ் மக்களுக்கான அவசரமும் வலியுமே தவிர, ஒபாமா, மன்மோகன், பான் கீ மூன் மற்றுமற்றுமுள்ள உலக–உள்நாட்டுத் தலைவர்களைப் போலவே இவர்களுக்கும் ஒரு அவசரமுமில்லை. எனவே, பழியை யார் யாரிலோ போட்டு விட்டு, அடுத்த தேர்தலுக்குக் காத்திருக்கிறார்கள்.

வாக்குகளுக்காக மக்களுக்கு உணர்ச்சியேற்றுவதற்கு எப்போதும் போல கைவசம் கதைகள் ரெடியாகவே உள்ளன. எனவே மக்களின் கேள்விகளைச் செவியில் வாங்கவேண்டிய கவலையே இல்லை. இராணுவம் இன்னும் நிலைகொண்டிருக்கிறது, முகாம்களும் உள்ளன, காணிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், அவ்வப்போது இவர்களுக்கு நாலாம் மாடி அழைப்போ அடியோ போட்டுக் கொண்டிருக்கிறார்கள்...

இவ்வளவு உதவிகளை அவர்கள் செய்துகொண்டிருந்தால் போதாதா? இன்னும் எத்தனை தேர்தல்களுக்கு வேண்டுமானாலும் இவற்றை ஆக்ரோசமுடன் கண்டித்து முழங்கியபடி வாக்குகளைக் கறந்து கதிரைகளையும் விடாமல் பற்றிக் கொண்டிருக்கலாமே!

- ஆசிரியர்

# இலங்கை குறித்த கனடாவின் நிலை ஏற்புடையதல்லவென அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பான கனடாவின் நிலைப்பாடு ஏற்புடையதல்ல என அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் சித்ராங்கனி வாகீஸ்வரா தெரிவித்துள்ளார். கனடா ஒரு பக்கச்சார் பாக செயற்பட்டு வருவதாக வும் இலங்கைக்கு எதிராக பிழையான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவின் நடவடிக்கைகளானது தீயசக்திகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அமையக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உறுப்பு நாடுகளின் இறைமைக்கு மதிப்பளித்தல், கூட்டுறவு, ஒத்துழைப்பு போன்ற பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகளுக்கு அனைத்து நாடுகளும் மதிப்பளிக்க வேண்டும் என்பதே இலங்கையின் நிலைப்பாடு என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இலங்கைக்கு பொதுநலவாய நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டியதே மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். கனேடிய வாழ் புலம் பெயர் தரப்புக்கள் உள்ளிட்ட சிலர் இலங்கையின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்துவதில் தீவிரம் காட்டி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# மாணவர் கௌரவிப்பு

புலோலி ப.நோ.கூட்டுறவுச் சங்க சாதனை மாணவர்கள் கௌரவிப்பும் பரிசூதிய சீட்டிழுப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ப.நோ.கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபைத் தலைவர் இ.பூரணச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.கூட்டுறவு அபிவிருத்திச் சங்க உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், சிறப்பு விருந்தினர்களாக வட மராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், ஈ.பி.டி.பி. வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும், திருமுறை மனனப்போட்டி பரிசளிப்பு விழாவும் இன்று மாலை 5.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இக் குருபூசை நிகழ்வில் அபிஷேகம், பூசையைத் தொடர்ந்து திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட திருமுறை மனனப்போட்டி பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளது.

இரா.செல்வவடிவேல் தலைமையில் இடம்பெறும் பரிசளிப்பு விழாவிற்கு சிறிநதியா நகைமாட முதல்வர் ந.சத்தியரூபன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு திருமுறை மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்குவார்.

திருமுறை மனனப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றோர் விபரம் வருமாறு,

பாலர் பிரிவு:

கி.ஆர்த்திகா, கு.வைஷ்ணவி, ச.துவாரகா (காரைநகர் கிழவன்காடு கலா மன்றம்),

கீழ்ப் பிரிவு:

சு.அபிலாஷ் (ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் வித்), சி.யஸ்வந்திகா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), அ.யேயந்தினி (காரைநகர் கிழவன்காடு கலா மன்றம்).

# வீதி அகலிப்பு பணிக்காக மின்சார விநியோகம் தடை

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கல்வியன்காடு, நல்லூர், அரியாலை, செம்மணி, பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி, விஞ்ஞானபீடப் பிரதேசம், அரசடி வீதி, கொழும்புத்துறை வீதி, வைமன் வீதி, கோவில் வீதி, றக்கா வீதி, இராசாவின் தோட்டம், பழைய பூங்கா, அத்தியடி புது வீதி, சோமசுந்தரம் அவனியூ, முலவைச் சந்தி, ஆஸ்பத்திரி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கச்சேரியடி, புங்கன்குளம், ஈச்சமோட்டை, பாசையூர், குருநகர், கந்தர் மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வென்ட் பிரதேசம், பிரதான வீதி,

மந்திகை, புலோலி, புற்றளை, சாரையடி, ஓராம் கட்டை, தம்பசிட்டி, பருத்தித்துறை நகரப் பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி ஆகிய இடங்களிலும்,

மேலும், இதேநாள் சுன்னாகம் மத்திய மின்நிலையத்தில் அவசர திருத்தவேலைகள் செய்யவேண்டியிருப்பதால் யாழ். குடாநாட்டின் பெரும்பாலான இடங்களில் காலை 8.00 மணியிலிருந்து 10.00 மணி வரையான, இரண்டு மணிநேரத்திற்கு மின்தடை அமுல்படுத்தப்படும்.

7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் அச்சுவேலி இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டைமானாறு வீதிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இன்புளுயென்சா தொற்று; மேலும் 10 கர்ப்பிணிகள் அனுமதி

(கொழும்பு)

இன்புளுயென்சா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் பத்து கர்ப்பிணித் தாய்மார்கள் காசல் வீதி பெண்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இன்புளுயென்சா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் மூன்று கர்ப்பிணித் தாய்மார்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மகிபால தெரிவித்துள்ளார்.

காசல் வீதி பெண்கள் வைத்தியசாலை, ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை மற்றும் சொய்ஸா பெண்கள் வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளில் இந்தக் கர்ப்பிணித் தாய்மார்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேல் மாகாணம் தவிர்ந்த வெளி மாகாணங்களில் இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் எவரும் பதிவாகவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்புளுயென்சா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் இருப்பின் அதுகுறித்து உடனடியாக அறிவிக்குமாறு அனைத்து வைத்தியசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பக்றீரியாத் தாக்கம் காரணமாக காசல் வீதி பெண்கள் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள் ளது.

எனினும் தீவிர சிகிச்சைப் பிரிவு தற்காலிகமாக வேறொரு இடத்தில் இயங்கி வருவதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரயில் பெட்டிக்குள் நடந்த கொலை!

மணியாச்சி சந்திப்பில் ரயில் வந்து நின்றது. முதல் வகுப்புப் பெட்டி, அந்த ரயிலிலிருந்து - கழற்றப்பட்டது. அதில், ஆங்கிலேய துரை ஆஷ் மற்றும் அவருடைய மனைவி இருந்தனர். ஊர் மக்கள், ஆஷ் துரையைக் காண வந்திருந்தனர். அந்த ஊரில், ஏன் அந்த மாவட்டத்திலே ஏதாவது நடக்க வேண்டுமென்றால், அதற்கு துரை மனது வைத்தால்தான் முடியும்.

ஆஷ் துரை வந்த ரயிலின் பெட்டியை, போட் மெயில் ரயிலோடு இணைக்க வேண்டும். துரையும், அவரது மனைவியும் கொடைக்கானலில் இருந்த தங்களுடைய நான்கு குழந்தைகளையும் பார்க்கச் செல்வதற்காக இந்த ஏற்பாடு.

போட் மெயில் வருவதற்குப் பத்து நிமிடங்கள் இருந்த நிலையில், இரண்டு வாலிபர்கள், துரை இருந்த ரயில் பெட்டிக்குள் நுழைந்தனர். ஒருவன் நன்றாக எடுப்பான தோற்றத்துடன் காணப்பட்டான். தன்னுடைய நீண்ட தலை முடியைச் சீவி, கொண்டை போட்டிருந்தான். மற்றொருவன் வேஷ்டி, சட்டை உடுத்தியிருந்தான். துரை தன்னுடைய மனைவி மேரியுடன் ஆர்வமாக ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

மேரியும் துரையும் எதிரெதிராக அமர்ந்திருந்தனர். ரயில் பெட்டிக்குள் இருவர் நுழைவதை துரை கவனிக்கவில்லை. வந்தவர்களில் ஒருவன், துரையின் அருகில் வந்து நின்றான். பெல்ஜியத்தில் தயாரிக்கப்பட்ட, பிரவுனிங் என்ற தானியங்கித் துப்பாக்கியை எடுத்தான். துரையின் நெஞ்சில் சுட்டான். துப்பாக்கிச் சூட்டின் சத்தம் கேட்டு, அமைதியாக இருந்த ரயில் நிலையம் அதிர்ந்தது. துரை அவர் அமர்ந்திருந்த இடத்தில் அப்படியே சரிந்தார். அவருடைய மனைவி அதிர்ச்சியில் உறைந்தார்.

துரையைச் சுட்டவன், பிளாட்பாரத்தில் இறங்கி ஓடினான். ரயில் நிலையத்திலிருந்த மக்கள் அவனைத் துரத்திக்கொண்டு ஓடினார்கள். ஓடியவன் நேராக பிளாட்பாரத்திலிருந்த கழி- வறையின் உள்ளே நுழைந்து தாழிட்டுக்கொண்டான். துப்பாக்கிச் சூடு நடத்தியவனுடன் வந்த மற்றவன், பிளாட்பாரத்தின் இன்னொரு பக்கம் ஓடி மறைந்தான். கழிவறையினுள் மறைந்த அந்த வாலிபன், தனது துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டான்.

துரையை, அவருடைய சிப்பந்திகள் திருநெல்வேலி மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றனர். ஆனால், போகும் வழியிலேயே துரையின் உயிர் பிரிந்தது. துரை கொலை செய்யப்பட்டுவிட்டார்.

ஆஷ் துரையின் கொலை, மதராஸ் மாகாணம் மட்டுமல்லாமல் நாடு முழுவதும் பரப்பரப்பாகப் பேசப்பட்டது. இறந்தவர் சாதாரண ஆள் இல்லை. அவர், திருநெல்வேலி மாவட்டத்தின் கலெக்டர். மேலும், ஆங்கிலேயர். அவரைச் சுட்டவன் ஓர் இந்தியன். கொலை நடந்த திகதி ஜூன் 17, 1911. இன்னும் 5 நாள்களில், இங்கிலாந்தின் 5ஆவது ஜோர்ஜ் மன்னராக முடிசூடிக்கொள்ள இருந்தார்.

மேரியும் துரையும் எதிரெதிராக அமர்ந்திருந்தனர். ரயில் பெட்டிக்குள் இருவர் நுழைவதை துரை கவனிக்கவில்லை. வந்தவர்களில் ஒருவன், துரையின் அருகில் வந்து நின்றான். பெல்ஜியத்தில் தயாரிக்கப்பட்ட, பிரவுனிங் என்ற தானியங்கித் துப்பாக்கியை எடுத்தான். துரையின் நெஞ்சில் சுட்டான். துப்பாக்கிச் சூட்டின் சத்தம் கேட்டு,அமைதியாக இருந்த ரயில் நிலையம்அதிர்ந்தது. துரை அவர் அமர்ந்திருந்த இடத்தில் அப்படியே சரிந்தார். அவருடைய மனைவி அதிர்ச்சியில் உறைந்தார்.





வாஞ்சிநாதனும் நண்பர்களும்

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் புரட்சிகரமான செயல்கள் பல, நாட்டில் நடந்து கொண்டிருந்தன. ஆனால், அனைத்துப் புரட்சிகர சம்பவங்களும், வட நாட்டில் அதுவும் குறிப்பாக வங்காளத்தில்தான் நடைபெற்றன. யாரும் தமிழகத்தில் இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. யார் இதைச் செய்திருப்பார்கள்? அவர்களுடைய பின்னணி என்ன? விசாரணையில் இறங்கியது, ஆங்கிலேய காவல் துறை.

துப்பாக்கிச் சூடு நடத்தியவன், ஓர் இளைஞன். அவனுக்குச் சுமார் 25 வயதிருக்கும். அவனுடைய சட்டைப்பையில் காவல்துறை எதிர்பார்த்தது கிடைத்தது. அது ஒரு துண்டுக் காகிதம். அதில்,

"ஆங்கிலேய மிலேச்சர்கள் நம் நாட்டை பிடித்ததோடல்லாமல், நம்முடைய சனாத்தன தர்மத்தை இழிவுபடுத்தி அதை அழிக்க முற்படுகிறார்கள். ஒவ்வொரு இந்தியனும் மிலேச்சர்களை விரட்டிவிட்டு, சுதந்திரம் பெற்று, சனாத்தன தர்மத்தை நிலைநிறுத்த போராடிக்கொண்டிருக்கிறான். ராமன், சிவாஜி, கிருஷ்ணன், குரு கோவிந்த சிங், அர்ஜுனன் வாழ்ந்த இந்தப் பாரதத்தில் பசு மாமிசத்தை உண்ணும், 5ஆவது ஜோர்ஜ் என்ற மிலேச்சனுக்கு மணிமகுடம் சூட்டுவதா? ஐந்தாவது ஜோர்ஜ் மன்னன் இந்தியாவில் அடியெடுத்து வைத்தவுடனேயே, அவனைக் கொல்ல 3000 மதராசிகள் உறுதி மொழி எடுத்திருக்கின்றனர். அதை வெளிப்படுத்தும் விதமாகத்தான், அக்குழுவின் கடை நிலைத் தொண்டனாக இந்தக் காரியத்தை இன்று செய்தேன். பாரதத்தில் உள்ள அனைவரும் இப்படிச் செய்வதைத்தான் தங்களுடைய கடமையாக நினைக்க வேண்டும்"

என்று குறிப்பிட்டிருந்தது.

காவல் துறையினர், துப்பாக்கிச் சூடு நடத்தியது யார் என்று விரைவிலேயே கண்டுபிடித்து விட்டனர். வாஞ்சிநாத ஐயர்.

வாஞ்சிநாதனின் வீட்டில் காவல் துறை சோதனை நடத்தியது. அதில் அவர்களுக்குச் சில கடிதங்கள் கிடைத்தன. கடிதங்களில் கண்ட விவரங்களின் மூலம், ஆஷ் துரையைக் கொல்ல ரகசியக்குழு ஒன்று கூட்டுச்சதி செய்திருப்பது தெரியவந்தது. அக்கடிதங்களில் ஆறுமுகப்பிள்ளையின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. காவல் துறை, ஆறுமுகப்பிள்ளையின் வீட்டை இரவோடு இரவாக முற்றுகையிட்டது. ஆறுமுகப்பிள்ளை கைது செய்யப்பட்டார். அவர் வீட்டிலும் சில கடிதங்கள் கிடைத்தன. காவல்துறை அவரை மேலும் விசாரித்ததில், சோமசுந்தரப்பிள்ளை என்ற இன்னொருவரைக் காட்டிக் கொடுத்தார். காவல் துறை சோமசுந்தரத்தைச் சுற்றி வளைத்தது. சோமசுந்தரமும் கைது செய்யப்பட்டார். ஆறுமுகப்பிள்ளையும், சோமசுந்தரமும் அரசுத் தரப்புச் சாட்சிகளாக (approver) மாறினர்.

ஆறுமுகப்பிள்ளையும், சோமசுந்தரமும் கொடுத்த வாக்குமூலத்தை வைத்து, காவல் துறை, தென்னிந்தியா முழுவதும் தேடுதல் வேட்டையை நடத்தியது. பதினான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பின்வருமாறு,

1) நீலகண்ட பிரம்மச்சாரி (முக்கிய குற்றவாளி) - தஞ்சாவூர் மாவட்டத்தில் பிறந்தவர். பத்திரிகையாளர். சூர்யோதயம் என்ற பத்திரிகையை நடாத்திவந்தார். ஆங்கிலேய அரசாங்கம் அப்பத்திரிகையைத் தடை செய்தது. அதன் பின்னர் பல பத்திரிகைகளைத் தொடங்கினார். ஆனால், ஆங்கிலேய அரசாங்கம் அவருடைய அனைத்துப் பத்திரிகைகளையும் முடக்கியது. ஆயுதப்புரட்சியில் நம்பிக்கையுடையவர். அரவிந்த கோஷைப் பின்பற்றியவர். (அரவிந்த கோஷ், வங்காளத்தைச் சேர்ந்தவர். ஆங்கிலேயர்களை ஆயுதம் கொண்டு விரட்டமுடியும் என்று நம்பியவர். அலிப்பூர் குண்டு வெடிப்பில், குற்றம் சாட்டப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். விடுதலையான பிறகு, அரசியலை விட்டு விலகி, ஆன்மிகத்தில் ஈடுபட்டார். புதுச்சேரியில் குடிபுகுந்து ஆச்சிரமம் அமைத்து அரவிந்தர் என அழைக்கப்பட்ட துறவியானார்.)

2) சங்கரகிருஷ்ண ஐயர் (வாஞ்சிநாதனின் மைத்துனர்) - விவசாயம் செய்துவந்தார்.

3) மாடத்துக்கடை சிதம்பரம் பிள்ளை - காய்கறி வியாபாரம் செய்துவந்தார்.

4) முத்துக்குமாரசாமி - பானை வியாபாரம் செய்துவந்தார்.

5) சுப்பையா பிள்ளை - வக்கீல் அலுவலகத்தில் குமாஸ்தாவாக வேலை பார்த்து வந்தவர்.

6) ஜகனாதா அய்யங்கார் - சமையல் செய்யும் வேலை

7) ஹரிஹர ஐயர் - வியாபாரி

8) பாபு பிள்ளை - விவசாயி

9) தேசிகாச்சாரி - வியாபாரி

10) வேம்பு ஐயர் - சமையல் செய்யும் வேலை

11) சாவடி அருணாச்சல பிள்ளை - விவசாயம்

12) அழகப்பா - விவசாயம்

13) வந்தே மாதரம் சுப்பிரமணிய ஐயர் - பள்ளிக்கூட வாத்தியார்

14) பிச்சுமணி - சமையல் செய்யும் வேலை

கைது செய்யப்பட்டவர்களில் பலர், இருபது வயதிலிருந்து முப்பது வயதுக்குட்பட்டவர்கள். அவர்களைத் தவிர குற்றம் சாட்டப்பட்ட இருவர், தற்கொலை செய்து கொண்டனர். அவர்கள்,

1) தர்மராஜா - விஷம் குடித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

2) வெங்கடேச ஐயர் - கழுத்தை அறுத்து தற்கொலை செய்து கொண்டார்.

(பிரபல கொலை வழக்குகள் நூலில் S.P.சொக்கலிங்கம்)

# வடக்கில் தேர்தலை நடத்த அரசிற்கு நிபந்தனை விதிப்பு




(கொழும்பு)

வடக்குத் தேர்தலுக்காக முக்கிய ஐந்து நிபந்தனைகளை சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம், விதித்துள்ளதுடன், அந்த நிபந்தனைகளை அரசு ஏற்கும் பட்சத்தில் தேர்தலுக்கு ஆதரவு வழங்கவும் தயார் என அறிவித்துள்ளது

இவ்விவகாரம் சம்பந்தமாக ஜனாதிபதிக்கும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் வடமாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசமைப்பில் மாற்றம் கொண்டு வருவார் எனத் தாம் நம்புவதாகவும் கலாநிதி வசந்த பண்டார கூறினார்.

பொலிஸ், காணி அதிகாரங்கள் நீக்கப்படவேண்டும். மாகாணசபைகள் இணைக்கப்படும் வகையில் மாகாணங்களுக்கிடையில் தீர்மானம் நிறைவேற்றப்படும் முறை இரத்துச் செய்யப்படுதல் அவசியம், பிரதேசசபைகளை மத்திய அரசு தனது கண்காணிப்பில் வைத்திருக்கவேண்டும்.

விசேட பாதுகாப்புச்சட்டமொன்று ஏற்படுத்தப்படவேண்டும். என்பவை உட்பட ஐந்து நிபந்தனைகள் இவ்வாறு முன் வைக்கப்பட்டுள்ளன. இந்த நிபந்தனைகளுக்கு அரசு சாதகமான பதிலை வழங்காத பட்சத்தில் அரசுக்கு எதிராகச் செயற்படவும் மேற்படி அமைப்புகள் தீர்மானித்துள்ளன

இவ்விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட கலாநிதி வசந்த பண்டார கூறியதாவது,

நாம் முன்வைத்துள்ள ஐந்து நிபந்தனைகளை ஏற்று அவற்றைச் செய்து முடித்த பின்னரே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடக்குத் தேர்தலுக்கு கட்டளை பிறப்பிக்க வேண்டும். இந்த விடயத்தை ஜனாதிபதிக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

மேற்படி நிபந்தனைகளை ஏற்று அதற்கேற்ற வகையில் திருத்தங்களைக் கொண்டுவராது அரசு வடக்குத் தேர்தலை நடத்துமானால் பாரிய விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும். அது தனி ஈழத்துக்கு வழிகோலும். ஜனாதிபதி எமது எதிர்பார்ப்பை வீணடிக்க மாட்டார் என நாம் நம்புகின்றோம். அந்த அடிப்படையில் வடக்குத் தேர்தலுக்கு முன்னர் அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரப்படும் என உறுதியாக நம்புகின்றோம்.

யுத்தத்தை வெற்றிகொண்டதனால் தான் ஜனாதிபதிக்கு மக்கள் செல்வாக்கு அதிகரித்தது. பிரிவினைவாதத்தை ஏற்படுத்தும் அதிகாரங்களை நீக்காது ஜனாதிபதி வடக்குத் தேர்தலை நடத்துவாரானால் அது யுத்த வெற்றியைக் காட்டிக்கொடுக்கும் செயலாகும். இந்தப் பொறிக்குள் ஜனாதிபதி விழமாட்டார் என நம்புகின்றோம். இது ஜனாதிபதிக்கும் நன்கு தெரியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பொருளாதார நிலை ஐ.எம்.எவ். எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார நிலைமைகள் குறித்து சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது. பணவீக்க வீதம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதங்களுடன் ஒப்பீடு செய்யும் போது பொருட்களுக்கான விலைகள் ஏப்ரல் மாதத்தில் குறைந்தளவே உயர்வடைந்துள்ளது என சுட்டிக்காட்டியுள்ளது. எனினும், பணவீக்கம் உயர்வடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது,

நிதிக்கொள்கை தொடர்பான நிபந்தனைகளை அரசாங்கம் வலுவாக பின்பற்ற வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. மின்சாரக் கட்டண உயர்வு ஒட்டுமொத்த நாட்டின் பொருளாதாரத்தையுமே பாதிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கைதான அசாத் சாலிக்கு எதிராக குற்றம் சுமத்தப்படவேண்டும்

### சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

(கொழும்பு)

அசாத் சாலிக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட வேண்டும் அல்லது விடுதலை செய்யப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது. சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டங்களுக்கு அமைவாக அசாத் சாலிக்கு எதிரான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென அது வலியுறுத்தியுள்ளது. அல்லது அசாத் சாலியை புலனாய்வுப் பிரிவினர் விடுதலை செய்ய வேண்டுமென குறிப்பிட்டுள்ளது.

அசாத் சாலி பொதுபலசேனா அமைப்பிற்கு எதிராக கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கத்திற்கு எதிராக கருத்துக்களையும் விமர்சனங்களையும் வெளியிடுவோர் தண்டிக்கப்படக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக காட்டியுள்ளது.

இலங்கை வாழ் சிறுபானமை மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக அசாத் சாலி குரல் கொடுத்து வருவதாக சர்வதேச மன்னிபபுச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய வலய பிரதிப் பணிப்பாளர் பொலி ட்ரஸ்கொட் தெரிவித்துள்ளார்

மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவோருக்கு எதிரான அடக்குமுறைகள் தொடர்பில் பொதுநலவாய உறுப்பு நாடுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## அரசின் மேதினக் கூட்டத்திற்கு இ.போ.ச.வின் 3500 பேருந்துகள்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் மே தினக் கூட்டத்திற்காக இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான 3,500 பேருந்துகள் நாடளாவிய ரீதியில் கொழும்புக்கு வந்ததாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்தது.

கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் மே தினக் கூட்டத்திற்கு நாட்டின் பல பாகங்களிலிருந்து அழைத்து வருவதற்காக இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் பயன்படுத்தப்பட்டன என பிரதி தலைவர் எல்.ஏ.விமலரத்ன தெரிவித்தார்.

இதற்காக ஒவ்வொரு பேருந்துக்கும் 10,000 ரூபா வாடகை அறவிடப்பட்டது என அவர் குறிப்பிட்டார். இந்த அறவீட்டில் முழுச் செலவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

ஏனைய பேருந்துகள் மக்களின் அன்றாட நடவடிக்கைக்காக மே தினத்தன்று பயன்படுத்தப் பட்டன என இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி தலைவர் எல்.ஏ.விமலரத்ன குறிப்பிட்டார்.

கடந்த வருட மே தின கூட்டத்திற்காக ஒரு பேருந்துக்கு 7,500 ரூபா அறவிடப்பட்டது. ஆனால், இந்த வருடம் 2,500 ரூபா மேலதிகமாக அறவிடப்பட்டது. இது டீசல் கட்டண அதிகரிப்புக்கே ஆகும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

## நிபந்தனைகளை ஏற்க முடியாததால் அமெரிக்க நிதியுதவி நிராகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் நிபந்தனைகளை ஏற்க முடியாது என்பதாலேயே அந்த நாடு வழங்கிய நிதியுதவியை நிராகரித்ததாக, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இந்திய ஊடகம் ஒன்றுக்கு தகவல் வெளியிட்டுளள, நாட்டின் நீதி அமைசசர் ரவூப் ஹக்கீம், நிதியுதவியுடன விதிக்கப்பட்ட நிபந்தனைகள நாட்டின் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என்பதாலேயே அது நிராகரிக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

நன்கொடைக்கான நிபந்தனைகள் ஒரு இறைமையுள்ள நாடு என்ற எமது நிலைக்கு ஏற்றதாக இருக்கவில்லை. என்றும் அவர் கூறியுள்ளார்.


அந்த நிபந்தனைகள் குறித்து வினவியபோது, இதற்கு மேல் என்னால் சொல்ல முடி யாது என்று அவர் கூறியுள் ளார். அதேவேளை, இந்த நன்கொடை நிதியைப் பயன்படுத்தும் குழுவின் தலைவராக இலங்கையின் தலைமை நீதியரசர் மொகான் பீரிஸ் இருப்பதே, இந்த சர்ச்சைக்குக் காரணம் என்று கொழும்பில் இருந்து வெளியாகும் டெய்லி மிரர் நாளிதழ், பெயர் வெளியிடப்படாத அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி தகவல் வெளியிட்டுள்ளது.

தலைமை நீதியரசர் மொகான் பீரிசின் நியமனத்தை தாம் அங்கீகரிக்கவில்லை என்பதால், அவர் அந்தக் குழுவின் தலைவராக இருப்பதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஆனால், மொகான் பீரிசே தலைவராக இருக்க வேண்டும் என்று இலங்கை வலியுறுத்தியுள்ளது. ஒரு இறைமையுள்ள நாடு என்ற வகையில் அமெரிக்காவின் இந்த எதிர்ப்பு ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கை கருதுவதாகவும் கொழும்பு டெய்லி மிரர் தெரிவித்துள்ளது.

## ஐ.நாவில் நிறைவேறிய தீர்மானம் அரசியல் நோக்கம் கொண்டது

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது அரசியல் நோக்கங்களைக் கொண்டது என இலங்கை குற்றம் சுமத்தியுள்ளது.

தேவையற்ற வகையில் இந்தத் திர்மானம் நிறைவேற்றப்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் ஜீஎல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தின் வெளிவிவகார அமைச்சர் சுராபொங் தொவிசக்கிகுல் உடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பௌதிக ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்கு தாய்லாந்து வழங்கி வந்த ஒத்துழைப்பு வரவேற்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது தாய்லாந்து இலங்கைக்கு உதவிகளை வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார். அனைத்து மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கக்கூடிய வகையிலான தீர்வுத் திட்டமொன்றை முனவைக்க அரசாங்கம் முனைப்பு காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பில் இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## பௌத்த தலிபான்வாதம் எதுவும் குறிப்பிடவில்லை

### என்கிறார் காலி பேராயர்

(கொழும்பு)

பௌத்த தலிபான்வாதம் பற்றி தாம் எதுவும் குறிப்பிடவில்லை என காலி பேராயர் டாக்டர் ரெய்மன் கிங்ஸ்லி விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பௌத்த தலிபான்வாதம் அல்லது பொதுபலசேனா அமைப்பிற்கு எதிராக கருத்து வெளியிடவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில ஊடகங்களில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டிருந்ததாகவும், இந்தத் தகவல்களில் உண்மையில்லை எனவும் பேராயர் அதி வணக்கத்திற்குரிய கிங்ஸ்லி விக்ரமசிங்கவின் பேச்



சாளர் வணக்கத்திற்குரிய மைக்கல் ராஜேந்திரம் பிதா தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டியதே தற்போதைய முதன்மைத் தேவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கையில் தொழிலாளர் சாசனம் உருவாக்கப்படுவது அவசியம்

## தொழிற்சங்கவாதி சிவபாலன்

(குருநகர்)

"சந்திரிக்கா ஆட்சியில் தொழில் அமைச்சராக இருந்த மகிந்த ராஜபக்ஷ தொழிலாளர் சாசனத்தை உருவாக்க முயற்சித்து நடைமுறைக்கு வராமற போனது. மகிந்த ஜனாதிபதியாகி பத்தாண்டாகியும், இன்னமும் தொழிலாளர் சாசனம் உருவாக்கப்படவில்லை" என தொழிற்சங்கவாதியான முன்னாள் இலங்கை வங்கி ஊழியர் சொ.சிவபாலன் (சிற்பி) தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை மாலை யாழ்.முதலாம் குறுக்குவீதி டி.சி.எம்.மீட்டல் கல்வி நிலையத்தில் தொழிலாளர் ஒத்துழைப்புக் குழு நடாத்திய தொழிலாளர் மேதினக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேற்கண்ட விதம் தெரிவித்தார்.

கூட்டம் முன்னாள் ஆசிரியர் சங்கத்தலைவர் த.தியாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. சொ.சிவபாலன் தொடர்ந்தும் கூறியதாவது,

"மேற்குலக நாடுகளில் தொழிலாளர்களின் நிலைமை ஏறுமுகமாக இருக்கின்றபோதும், நமது நாட்டுத்தொழிலாளர்கள் நிலைமை கவலைக்கிடமாகவே இருந்து வருகிறது. இன்றைய காலகட்டங்களில் தொழிலாளர்கள் போராடும் வல்லமையை இழந்தவர்களாகக் காணப்படுகிறார்கள்.

அதற்கான புறக்காரணங்கள் காணிகள் அபகரிப்பு, மீளக் குடியிருப்புகளில் இடர்பாடுகள், உரிமைகள் பறிக்கப்பட்டுள்ள தற்கால ஒடுக்கு முறைகளே அடிப்படையாகத் திகழ்கின்றன" என்றார்.

சட்டத்தரணி ரங்கன் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு மயில்வாகனம் சூரியசேகரன் கருத்துரைக்கையில்,

"இடது சாரிகளிடையே ஏற்பட்ட உடைவுகளே தொழிலாளர்களின் ஆக்ரோச உணர்ச்சிகளை மழுங்கடிக்கக் காரணமாயின. கம்யூனிச, சம சமாசக் கட்சிகள் முன்னைய அடிப்படைக் கருத்துகளைப் புறம் தள்ளி ஏகபோக உலகமயமாக்கல் அணுகுமுறைகளால் ஆட்சிக்கு ஆட்சி பதவிகளில் இடம் பிடித்துக்கொண்டமையும் பாட்டாளி வர்க்க எழுச்சியைப் பின் தள்ளியது" என்றார். (68)

## கந்தபுராணப்படிப்பு

(வடமராட்சி)

புலோலி தான் தோன்றி உபயகதிர்காம முருகன் ஆலயத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் கந்த புராணப்படிப்பு ஆரம்பமாக உள்ளது.

மே மாதம் 29ஆம் திகதி புதன் கிழமை மகேந்திர காண்டப் படிப்பும், யூன் மாதம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை "வள்ளி திருமணம்" படிப்பும் இடம்பெறவுள்ளன. (01)

# தென்மராட்சிப் பகுதிகளில் பலாப்பழ 'சீசன்' ஆரம்பம்

(சாவகச்சேரி)

பலாப்பழத்தின் பருவகாலம் தற்போது ஆரம்பித்துள்ள நிலையில் பலாப்பழத்தின் வருகையும் சந்தைகளில் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

கொடிகாமம், சாவகச்சேரி, வரணி, கைதடி சந்தைகளில் தற்போது பலாப்பழ வியாபாரம் ஆரம்பமாகியுள்ளது. கடந்த காலத்தில் மிக அரிதாகக் காணப்பட்ட பலாப்பழம் சந்தைகளில் கூவி விற்கும் அளவிற்கு வியாபாரம் ஆரம்பித்துள்ளது. இனிவரும் மாதங்களில் இச்சந்தைகளில் பழவகைகளின் வரத்து அதிகரிக்கும் கல்வயல், மட்டுவில், மீசாலை, கொடிகாமம், கச்சாய் போன்ற பகுதிகளில் இருந்தே பலாப்பழங்களும், மாம்பழங்களும் வந்து குவிந்த வண்ணம் இருக்கும். தற்போதுள்ள காலநிலையின் மாற்றத்தில் ஏற்படும் மழை வீழ்ச்சியின் காரணமாக பூக்களின் உதிர்வால் இம்முறை மாம்பழத்திற்கு கிராக்கி ஏற்படும் என்று பலரும் தெரிவிக்கின்றனர். (இ)

# 23ஆவது நிறைவு விழா


(திருநெல்வேலி)

திருநெல்வேலி வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 23ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை திருநெல்வேலி வடக்கு ஆடியபாதம் வீதியில் உள்ள சங்கக்கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் வைத்தியக் கலாநிதி ந.சிவராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் வ.செ.மகேந்திரன், யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பரிவு உதவிப் பணிப்பாளர் எம்.இராசநாயகம், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் ஆ.ஞானவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கவிதை, பாட்டு, நடனம், போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வலுவிழந்தோர் புனர்வாழ்வுக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (137)



**வயம்ப பிரதேச கலாசார பேரவையினர் அண்மையில் யாழ்ப்பாண கலைஞர்களுடன் புரிந்துணர்வு சந்திப்பை ஏற் படுத்தும் முகமாக யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வரிடம் யாழ்.நூலகத்திற்கு நூல்களை வழங்குவதைக் காணலாம். (105)**

## விபரம் திரட்ட பணம் அறவீடு

(வரணி)

பருத்தித்துறை மந்திகை ஆதாரவைத்தியசாலை உளநலப்பிரிவில் கிளினிக் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களின் விபரம் திரட்டப்பட்டு வருகிறது. இதில் அவர்கள் நோய் சம்பந்தமான விபரம், தொழில் தங்கிவாழ்வோர் போன்ற பல விதமதான தரவுகள் உளநலப் பிரிவினரால் பெறப்பட்டு விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

இத்தரவு மேற்கொள்ளப்படும் ஒரு நோயாளரிடம் இருபது ரூபா பணம் அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (150)

# குருபூசை விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் நல்லூர் பிரதேச அறநெறிப்பாடசாலையினரும் இணைந்து நடாத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் கோவில் முன்றலிலுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மாணிக்கராஜசர்மா அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு, சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் தி.சோமசேகரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் விடயம் பற்றி ஆசிரியர் எஸ்.பாலச்சந்திரன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# முரசின் இன்றைய பலன்

**(04.05.2013 - சனிக்கிழமை)**

**விஜய வருஷம் சித்திரை மாதம் 21 ஆம் திகதி.**
**சதயம், சித்தம் பின்னிரவு 04.21 வரை. திதி. நவமி மரணம் காலை 06.45 வரை. பின்னிரவு 05.28 வரை. தசமி**
**இராகுகாலம் 08.56 -10.26 வரை. சுபநேரம் 02.56 - 04.26 வரை.**

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **மேடம்** | வெற்றிச் செய்திகள் வரும். மனதில் அக்ந்தை வராமல் கவனமுடன் இருக்கவேண்டும். தொழில், வேலைப்பளு அதிகரிக்கும். தவிர்க்க இயலாத பணச் செலவு வரும். உறவினர், நண்பர்களுடன் கொண்டாட்டமிருக்கும். உணவிலும் இசையிலும் ரசிப்பு. |
| **ரிஷபம்** | வெளித் தொடர்புகளால், சிறு சிரமம் அடைவீர்கள். விலகுவதால், மனஅமைதியைப் பாதுகாக்கலாம். தொழில், போட்டி அதிகரிக்கும். புதிய அணுகுமுறைகள் பரீட்சிப்பீர்கள். சேமிப்பு பணம் செலவுக்குப் பயன்படும். வாகன பயணத்தில் கவனம். |
| **மிதுனம்** | சில பணிகள் தாமதம் ஆவதால், மனதில் சஞ்சலம். வேண்டப்பட்டோரின், ஆலோசனை நல்வழி உருவாக்கும். தொழில், சராசரி அளவில் இருக்கும். குடும்பத்தேவைக்கான செலவு அதிகமாகும். அலைச்சலால் சோர்வு. உடல் நலத்திற்கு உணவில் கவனம். |
| **கடகம்** | பெருந்தன்மையுடன் செயற்படுவீர்கள். நண்பருக்கு இருந்த மனக்கிலேசம் சரியாகும். தொழிலில், அபிவிருத்தி பணி நிறைவேறும். ஆதாய பணவரவு. இல்லறத்துணை விரும்பியது வாங்கித் தருவீர்கள். எதிர்பார்த்திருந்த வெளியூர் பயணத்திற்கும் வாய்ப்பு. |
| **சிம்மம்** | பேச்சில் தத்துவமும், ஞான சிந்தனையும். எவரையும் அன்புடன் நேசிப்பீர்கள். தொழில், திருப்திகரமான முன்னேற்றம் அடையும். இலாபம் அதிகரிக்கும். வீடு, வாகன திருத்தம் அல்லது மாற்றம் நடைபெறும். குடும்பத்தினருடன் சென்று வழிபாடு நிறைவேற்றுவீர்கள். |
| **கன்னி** | சிறு வேலை கூட உங்களுக்கு கடினமாகத் தோன்றலாம். யாருடனும், தேவையற்ற விவாதம் வேண்டாம். தொழில், இலக்கை அடைய கூடுதல் உழைப்பு உதவும். குடும்ப பணத்தேவை அதிகரிக்கும். போக்குவரத்தில் கவனம். பக்தி மார்க்க ஈடுபாடு. |
| **துலாம்** | பொது நலன் பற்றிய அக்கறை மிகுந்திருக்கும். சமூகத்தில் நற்பெயர் பெறுவீர்கள். தொழில் செழித்து, திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். பணவரவு திருப்திகரம். உத்தியோகத்தர் பாராட்டு, வெகுமதி பெறுவர். உடல்நலம் பலம் பெறும். குடும்ப மகிழ்வு. |
| **விருச்சிகம்** | எதிர்கால நலன் பற்றி அக்கறை கொள்வீர்கள். சுதந்திரமாக செயற்பட விருப்பம் உண்டாகும். தொழில், திட்டமிட்ட இலக்கை அடையலாம். சராசரி பணவரவுடன், கடனும் வசூலாகும். உறவினர் வருகையால், சில நன்மைகள் கிடைக்கும். |
| **தனுசு** | நண்பர், உறவினருக்கு உதவுவீர்கள். தொழில் வளர்ச்சி பெற, புதிய வாய்ப்பு வரும். முயற்சியுடன் செயற்பட்டு, உபரிபணவரவு பெறுவீர்கள். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுபசெய்தி வரும். புத்திரர் விரும்பியதை வாங்கித் தருவீர்கள். உணவை தேர்ந்து உண்க. |
| **மகரம்** | எந்தச் செயலையும் சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். உங் கள் தனித்திறமையை, பிறர் வியப்பர். தொழில், இருந்த இடையூறு விலகும். ஆர்வமுடன் உழைப்பீர்கள். பணவரவு முன்னேற்றம் பெறும். வெகுநாள் காணாமல் தேடிய பொருள் கைவந்து சேரும். |
| **கும்பம்** | பேச்சில் நிதானம் பின்பற்றுவீர்கள். சிந்தித்து செயற்பட்டு எதையும் வெற்றிகரமாக முடிப்பீர்கள். தொழிலில், அதிக முயற்சியும், உழைப்பும். வரவை விட செலவு கூடும். பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு வேண்டியதை செய்வீர்கள். உணவில் கவனம். |
| **மீனம்** | உங்களை சிலர் குறை சொல்ல காத்திருப்பர். கோபத்தை விலக்கி செயற்படுவது நல்லது. தொழில், அளவான மூலதனம் போதும். இல்லறத்துணையின் ஆலோசனை நம்பிக்கை தரும். நெருக்கமானவர்களுடனான சந்திப்பைப் பிற்போடவும். |



படப்பிடிப்பு: ஆர். இராஜகுமார்


# நண்பர்களின் போர் நேற்று ஆரம்பம் கனகரத்தினம் மத்திய ம.வி. ஆதிக்கம்



பான்ட் வாத்திய இசையுடன் வீரர்கள், விருந்தினர்கள் அழைத்து வருதல்



அணித் தலைவர்கள் நாணயச் சுழற்சியில் ஈடுபடுதல்



(யாழ்ப்பாணம்).

நண்பர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணிக்கும், யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் (ஸ்ரான்லி) அணிக்குமிடையிலான நண்பர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று நண்பகல் 12.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற முள்ளியவ்ளை வித்தியானந்தாக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் களமிறங்கிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணியின் பந்துவீச்சு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. இதன் காரணமாக முதல் விக்கெட்டை 18 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்த கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி தடுமாறியது. இருப்பினும் முதலாவது விக்கெட்டுக்காக இணைந்த சுரேஷ், மதன் இணை நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கும் முனைப்புடன் செயற்பட்டது. இந்த ஜோடி 44 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து சிறப்பான முறையில் செயற்பட்ட முள்ளியவ்ளை வித்தியானந்தாக் கல்லூரி அணி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியின் விக்கெட்டை சீரான இடைவெளியில் சாய்த்தவண்ணமிருந்தது. குறிப்பாக, அஞ்சயன், விதுஷன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் கப்டன் கம்சிகாந் ஒரு முனையில் அதிரடியாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். இறுதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் கம்சிகாந் 34, சுரேஷ் 25, மதன் 24, உதயா 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஞ்சயன் 64 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, விதுஷன் 26 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி ஆரம்பம் முதலே தடுமாறி வருகின்றது. குறிப்பாக, உதயாவின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வருகின்றது. இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கப்டன் இர்பாஸ் ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்து வீச்சில் உதயா இரண்டு, சுரேஷ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். ஆறு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் வித்தியானந்தாக் கல்லூரி அணி 138 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் இறுதி நாளாகும். இதே வேளை, நேற்றைய முதல் நாள் ஆட்டத்தின் போது மதியம் வீரர்கள், பான்ட் வாத்திய இசையுடன் வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் கல்விச் சமூகத்தைச் சேர்ந்த பல அதிகாரிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# ஆவரங்காலில் மாவட்ட கரப்பந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் ஆவரங்கால் இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட விளையாட்டுச் செயலகத்தினால் நடத்தப்படும் மாவட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டி ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதேச செயலக மட்டத்தில் முதலிரு இடங்களைப் பிடித்த அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# கிளிநொச்சியில் மரதன்

(கிளிநொச்சி)

உலக செஞ்சிலுவை தினத்தையொட்டி இன்றைய தினம் கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க கரைச்சிக் கிளையின் ஏற்பாட்டில் ஆண், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி இடம்பெறவுள்ளது.

ஆண்களுக்கான போட்டி இன்று காலை ஆனையிறவில் ஆரம்பமாகி கிளிநொச்சி பொதுவைத்தியசாலை முன்றலில் நிறைவடையும் எனவும், பெண்களுக்கான போட்டி பரந்தன் சந்தியில் ஆரம்பமாகி கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நிறைவடையும் எனவும் இப்போட்டியில் வெற்றியீட்டும் வீர,வீராங்கனைகள் எதிர்வரும் எட்டாம் திகதி நடைபெறவுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்ற முடியும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (112)

# யாருக்கு நிரந்தரம்?



(சென்னை)

ஐ.பி.எல். தொடரில் அதிக ஓட்டங்கள் குவிக்கும் வீரருக்கு ஒரேஞ்ச் நிற தொப்பி வழங்கப்படுகிறது. பஞ்சாபுக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை வீரர் மைக் ஹசி 35 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் பெங்களூர் வீரர் கிறிஸ் கெய்லை விட ஒரு ஓட்டம் முந்தி அதாவது 485 ஓட்டங்களுடன் (10 ஆட்டம்) முதலிடத்தைப் பிடித்து நேற்று முன்தினம் மாலை ஒரேஞ்ச் தொப்பியைத் தனதாக்கினார். ஆனால் இரவில் அந்த தொப்பி உடனே கெய்ல் வசம் சென்று விட்டது. புனேக்கு எதிரான ஆட்டத்தில் 21 ஓட்டங்கள் எடுத்த கெய்லின் ஒட்டுமொத்த ஓட்ட எண்ணிக்கை 505 ஓட்டங்களாக (11 ஆட்டம்) உயர்ந்து விட்டது. இதனால் மீண்டும் அவரது தலையை ஒரேஞ்ச் தொப்பி அலங்கரித்துக் கொண்டிருக்கிறது.

# மட்டுவில் வளர்மதி வி.க.வில் இன்று பிரதேச செயலக விளையாட்டு விழா

(மட்டுவில்)

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டி நிகழ்வு தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வெஸ்திரி அலன்ரின், சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.எம். ராஜாரணசிங்க, கௌரவவிருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஆர். மோகனதாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்றைய இறுதி நாள் போட்டிகளில் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன், கச்சாய் ஸ்ரீமுருகன் அணிகள் மோதவுள்ள அதேவேளை, கால்பந்தாட்டப் போட்டியின் இறுதியில் நாவற்குழி அண்ணா அணியை எதிர்த்து வர்ணி செல்வா அணி மோதவுள்ளது. அத்துடன் மைதான சுவட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்விளையாட்டு விழாவில் பங்குகொள்ளவுள்ள அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறும், பிரதேசத்திலுள்ள விளையாட்டுஆர்வலர்கள், நலன்விரும்பிகள், இரசிகர்கள்,ஆதரவாளர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு போட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டுமாறும் போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (118)



# சஞ்சஜன் சகலதுறையில் ஜொலிப்பு

# கே.சி.சி.சி. கிண்ணம் ஜொனியன்ஸ் வசம்



(கொக்குவில்)

சஞ்சஜனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை யாழ். ஜொனியன்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையில் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். பல்கலைக்கழக அணியும், யாழ். ஜொனியன்ஸ் அணியும் மோதின. இறுதிப் போட்டி 40 ஓவர்களைக் கொண்ட ஆட்டமாக நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். ஜொனியன்ஸ் அகிலன், சஞ்சஜன் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் ஜொனியன்ஸ் அணி 40 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 274 ஓட்டங்களைப்பெற்றது. இதில் அகிலன் 69, தக்ஷன் 29, ரட்ணம் 32, அன்புஜன் 28, சஞ்சஜன் 43, காண்டீபன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெயரூபன் நான்கு, விதுரன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 275 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். பல்கலைக்கழக அணி, லவேந்திரா, சஞ்சஜன் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடு கொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.இருப்பினும் அச்சுதன்,ஜனார்த்தனன் ஆகியோர் அணியின் நிலையை உணர்ந்து ஆடியதுடன் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொள்ளவும் வழி வகுத்தனர். இறுதியில் யாழ். பல்கலைக்கழக அணி 37.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 244 ஓட்டங்களைப் பெற்று 31 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் அச்சுதன் 64, ஜனார்த்தனன் 46, ஜெயரூபன் 34, தசீந்தன் 23 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் லவேந்திரா, சஞ்சஜன் தலா மூன்று, டக்ஷன் பிருந்தாபன் தலா இரண்டு விக்கெட்டுக்களை, வீழ்த்தி அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். இதன் மூலம் யாழ். ஜொனியன்ஸ் அணி இந்தாண்டுக்கான கே.சி.சி.சி. வெற்றிக். கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக யாழ். ஜொனியன்ஸ் அணியைச் சேர்ந்த சஞ்சஜன், சிறந்த துடுப்பாட்ட வீரராக அதே அணியைச் சேர்ந்த அகிலன், சிறந்த பந்து வீச்சாளராக யாழ். பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த தேவவிதுரன், சிறந்த களத் தடுப்பாளராக ஜொனியன்ஸ் அணியைச் சேர்ந்த காண்டீபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (எஸ்.பி.)

## அஸ்ஹார் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அராலி வீதி 5ஆம் குறுக்கில் அமைந்துள்ள அல்அஸ்ஹார் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை நண்பகல் 1 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்தாபகர் கே.எம். நியாஸ் (நிலாம்) தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், கௌரவ விருந்தினராக யாழ். உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா, யாழ். உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. விமலநாதன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர சபை உறுப்பினர்களான பீ.எஸ். சுபியான், பீ. அஸ்கர் ரூம், பி.எம். சரபுல் அனாம், எம்.எஸ்.எம். முஸ்தா மற்றும் ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ.எம். முபாரக், மௌலவி அப்துல் அஸீஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இப்போட்டி நிகழ்வில் க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியெய்திய யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (105)

## அணித் தேர்வு இன்று

(புதுடில்லி)

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி விபரம் இன்று அறிவிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே, அறிவிக்கப்பட்டுள்ள 30 பேர் கொண்ட பட்டியலில் அதிரடி வீரர் சேவாக் நீக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் 30 பேர் கொண்ட அணியில் இடம்பிடித்துள்ள கௌதம் கம்பீர் 15 பேர் கொண்ட அணியில் இடம்பிடிப்பது கடினம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தவான், ரோகித் சர்மா போன்ற இளம்வீரர்கள் ஐ. பி. எல். தொடரில் அசத்துவதால் கம்பீரின் நிலைகவலைக்கிடமாக அமையும் என இந்திய கிரிக்கெட் சபையைச் சேர்ந்த முக்கிய அதிகாரி ஒருவர் மூலம் தகவல் கசிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கை அணி அறிவிப்பு

(கொழும்பு)

இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக்கான இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. அஞ்சலோ மத்தியூஸ் தலைமையிலான 15 பேர் கொண்ட குழாமே அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருமளவு எதிர்பார்க்கப்பட்ட வீரர்களைக் கொண்டு அறிவிக்கப்பட்டுள்ள இக்குழாமினை விளையாட்டுத்துறை அமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

சிரேஷ்ட வீரர்களான குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, திலகரட்ண டில்சான், ரங்கன ஹேரத், லசித் மலிங்க ஆகியோரைக் கொண்டு அறிவிக்கப்பட்டுள்ள இக்குழாமில் சானக வெலகெதரவிற்கும் இடம் வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் இலங்கை ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாமில் சேர்க்கப்பட்டிருக்காத உபுல் தரங்க, அஜந்த மெண்டிஸ் இருவருக்கும் இக்குழாமில் இடம் கிடைக்கவில்லை. அறிவிக்கப்பட்ட இந்த அணி இங்கிலாந்து மண்ணில் சாதிக்கும் என இலங்கை தெரிவுக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்: அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சண்டிமால், திலகரட்ண டில்சான், குஷால் ஜனித் பெரேரா, குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, லஹிரு திரிமன்ன, ஜீவன் மெண்டிஸ், திஸர பெரேரா, லசித் மலிங்க, ரங்கன ஹேரத், நுவான் குலசேகர, ஷமிண்ட எரங்க, சச்சித்திர சேனநாயக்க, சானக வெலகெதர.




# தலைவராக மிக்கி கட்லிங்

MCC எனப்படும் மேரிலிபோன் கிரிக்கெட் கழகத்தின் தலைவராக இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் மிக்கி கட்லிங் பெயரிடப்பட்டுள்ளார்.

ஒரு வருடத்திற்கான தனது பதவிக் காலத்தை எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் அவர் ஆரம்பிக்கவுள்ளார்.

2014 ஆம் ஆண்டு இரு நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடவுள்ள MCC, மீள் அபிவிருத்தி தொடர்பான தனது திட்டத்தையும் வெளியிட்டுள்ளது.

2027 ஆம் ஆண்டில் நிறைவுசெய்ய எதிர்பார்த்துள்ள இந்த திட்டத்திற்கு 180 மில்லியன் யூரோ தொடக்கம் 200 மில்லியன் யூரோ வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# சிம்பாப்வே அணிக்கு புதிய பயிற்றுவிப்பாளர்



சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் புதிய தலைமைப் பயிற்றுவிப்பாளராக அந்த அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் அன்டி வெலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது நடைபெற்றுவரும் பங்களாதேஷ் உடனான தொடருக்குப் பின்னர் அணியின் பயிற்றுவிப்பாளர் பொறுப்பினை அவர் ஏற்கவுள்ளார்.

இந்நிலையில், தற்போது சிம்பாப்வே தேசிய அணியின் பதில் பயிற்றுவிப்பாளராக செயற்படும் ஸ்ரிபன் மன்கொன்கோ உதவிப் பயிற்றுவிப்பாளராக பணியாற்றவுள்ளார்.

பயிற்றுவிப்பாளராக தெரிவு செய்யப்பட்டமை குறித்து கருத்துத் தெரிவித்த அன்டி வெலர், என்னை நம்பி பயிற்றுவிப்பாளர் பதவி அளிக்கப்பட்டமைக்கு முதல் கிரிக்கெட் சபைக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அணியை அடுத்த நிலை நோக்கி நகர்த்திச் செல்வதற்கு என்னாலான அனைத்து முயற்சிகளையும் முடிந்த வரை மேற்கொள்வேன். துடுப்பாட்டம், பந்து வீச்சு என இரண்டு துறைகளிலும் முன்னேற்றம் இன்னும் தேவை என்று கருதுகின்றேன். விரைவில் மாற்றம் வரும் என்றார்.

"இலங்கைத் தமிழரின் நிலைப்பாடுகள் குறித்த முடிவுகளை எடுக்க வேண்டியது யார் என்ற கேள்விக்குப் பதில் தேடிப் பார்த்தாலே, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எழும் எல்லாக் குழப்பங்களுக்கும் விடை கிடைத்து விடும்" என்றார் ஒரு யாழ்ப்பாணப் பிரமுகர். அவர் வைத்த வாதங்கள் இவை.

தெரியாமல், இலங்கை அரசு அழித்த தமிழர்களைவிட, தமிழன் அழித்த தமிழர்கள்தான் அதிகம் என்ற உண்மை புரியாமல், தமிழன் என்ற ஒற்றை உணர்வில், அந்தப் பாசத்தில் தமிழகத்தில் போராடும் மாணவர்களா? அல்லது இலங்கையில் தங்கள் சொந்த மண்ணில் வாழும் நாங்களா? இவர்களில் முடிவெடுக்க வேண்டியது யார்?

"சந்தேகமில்லாமல் நாங்கள்தானே? எங்கள் முடிவு என்ன என்பதைத்தானே மற்ற எல்லோரும் ஏற்க வேண்டும்?

ஆளுங்கட்சிக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்குத்தான் மெஜாரிட்டி அளித்தனர். அந்தக் கட்சிதான் யாழ்ப்பாண மேயர் பதவியைக் கைப்பற்றியது. 2010ஆம் ஆண்டு நாடாளு மன்றத் தேர்தலில், யாழ். மாவட் டத்தில் மூன்று எம்.பி.க்கள் ஆளுங்கட்சிக் கூட்டணியில் இருக்கும் தமிழ்க் கட்சியிலிருந்தே தெரிவானார்கள். வாக்களித்தது எல்லாமே தமிழர்கள்தான் சிங்களவர் இல்லை.

"விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு, 2004ஆம் ஆண்டு தேர்தலில் 23 இடங் களை வென்றது. இறுதிப் போருக்குப் பிறகு நடந்த 2010 தேர்தலில் 14 இடங்களை மட்டுமே வென்றது. கிழக்கு மாகாண சபையையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பால் வெல்ல முடியவில்லை. தமிழர் கள் பெருவாரியாக வாக்களித்த பகுதிகளில் இதுதான் நிலைமை. ஆளுங்கட்சியோடு கூட்டணி வைத்தவர்கள் எல்லாம் தமிழ்த் துரோகிகள் என்றால், அவர்களுக்கு வாக்களித்த ஈழத் தமிழர்களெல்லாம் யார்?

"இங்குள்ள மக்களின் மனோ பாவம் தெரியாமல், வெளிநாடு களில் இருந்துகொண்டு தங்கள் ஆசையை எங்கள் மீது திணிக்க முனைபவர்கள்தான், உண்மையில் ஈழத் தமிழர்களின் விரோதிகள்" என்றார் அவர்.

# ஈழத் தமிழர்களின் விரோதிகள்!

துக்ளக்

– துக்ளக் கட்டுரையிலிருந்து.

"இலங்கைத் தமிழர் குறித்து முடிவெடுக்க வேண்டியது யார்? போருக்குப் பயந்து, உயிர் பயத்தில் வெளிநாடுகளுக்கு ஓடிப் போய், அந்த நாடுகளின் இரக்கத்தில் சொகுசான வாழ்க்கையை மேலை நாடு களில் வாழ்ந்து கொண்டிருக்கும் புலம் பெயர்ந்த தமிழர்களா? அந்தப் புலம் பெயர்ந்த தமிழர்களிடம் சலுகைகளை அனுபவித்துக் கொண்டு, தமிழகத்தில் அரசியல் செய்யும் அரசியல்வாதிகளா? இலங்கையின் வரலாறு என்ன, போர்களில் தமிழர்கள் அடைந்த இழப்புகளுக்கு யார், யார் காரணம் என்பதெல்லாம்

ஏனென்றால், இங்கு வாழ்வது நாங்கள்தானே? "வாழ்க்கையை அழித்துக் கொண்டது போதும். இனியேனும் உயிர் தப்பி மிஞ்சியிருப்பவர்கள் தங்களின் மிஞ்சிய வாழ்க்கையை நிம்மதியாகக் கழிக்கவேண்டும். அதற்கு யார் நல்லது செய்ய முடியுமோ அவர்கள் பக்கம்தான் போகவேண்டும்" என்ற மனோ நிலையில் உள்ள எங்களின் முடிவுக்குத்தானே மற்றவர்கள் கட்டுப்பட வேண்டும்? இங்குள்ள தமிழர் அளித்துள்ள முடிவுகள் என்ன?

"2009 ஆம் ஆண்டு யாழ் மாநகராட்சி மேயர் தேர்தலில் யாழ்ப்பாணத் தமிழர்கள்,

# ஹைடெக் சட்டை




எல்லா நவீன சட்டை போல இதைச் சாதாரணமாக நினைத்து விடக் கூடாது. இதன் ஒரு பகுதியில் தட்டினால், இசைப்பதற்கான ஒரு தாளத்தை தொடங்கலாம். சட்டையின் வேறு பகுதியைத் தேய்த்தால் தாளத்தையே மாற்றலாம். கையைத் தூக்கினால் தாளத்தின் வேகத்தைக் கூட்டலாம்.

நம் உடலைக் கொண்டு இசையை உருவாக்கலாம், கட்டுப்படுத்தலாம். இந்த உடைக்கு "மஷீனா" என்று பெயர். இதனை மெக்சிகோ சிட்டியைச் சேர்ந்த ஒரு டிசைனர் குழு உருவாக்கியிருக்கிறது.

அணிந்துகொள்ள முடிகிற, நிஜமான நேரடிப் பயன்பாடு உள்ள தொழில்நுட்பத்தை உருவாக்க முடியுமா என்று இதன் பிரதம வடிவமைப்பாளர் அன்டோனியோ மஷினா தன்னையே கேட்டுக் கொண்ட கேள்வியின் விளைவாக இதை உருவாக்கியிருக்கிறார்.

இது அணிந்துகொள்ளக் கூடிய ஒரு இயந்திரம். இதில் பொருத்தப்பட்டுள்ள சென்சர்கள், ஜோய்ஸ்டிக் ஆகியவற்றை இசையை உருவாக்குவதற்குப் பதில் வேறு ஏதாவது பயன்பாட்டுக்கும் மாற்றிக் கொள்ளலாம்.

இந்த இயந்திரச் சட்டையை அணிந்துகொண்டிருப்பவருக்கு மின்காந்த பாதிப்புகள் நேராமல் இருக்க விசேஷ தொப்பி ஒன்றையும் உருவாக்கியிருக்கிறார்கள்.

இலவச மென்பொருள், கணணியின் மூல மென்பொருள்களில் வெளிப்படைத்தன்மை, உலகம் முழுவதும் தகவல் பரிமாற்றத்தில் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றில் மிகத் தீவிர பற்றுக் கொண்டு செயற்படுபவர்களில் அன்டோனியோ மெஷினாவும் ஒருவர்.

# பிழையின்றித் தமிழ் 17

– ஞானச்செல்வன் –

**தன்வினை செய்வினையா?**

தமிழாசிரிய நண்பரொருவர் தொலைபேசி வழியாக வினவினார்: "ஐயா, தன்வினை, பிறவினை என்றும், செய்வினை செயப்பாட்டு வினையென்றும் இலக்கணம் கற்பிக்கிறோமே, இவற்றுள் தன்வினையும், செய்வினையும் ஒன்றுபோல்தானே உள்ளன? இவற்றிடையே வேறுபாடு என்ன?"

இ:.து அறிவினாவா? அறியா வினாவா? என்று நம்மால் சொல்ல இயலவில்லை. மக்களுக்குத் தெரிந்ததெல்லாம் தன்வினை தன்னைச் சுடும் என்பதும், யாரோ செய்வினை செய்துவிட்டார்கள் என்பதும் அல்லவா? தன்வினையாவது? செய்வினையாவது? எல்லாம் உங்கள் வினை என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளுதல் முறையா?

செயப்பாட்டு வினை வடிவம் என்பது தமிழ்மொழிக்குப் புதியதே ஆகும். பள்ளிப் பாட நூலில் செய்வினை, செயப்பாட்டு வினை என்று வந்தாலும் அது ஆங்கில மொழியின் தாக்கத்தால் விளைந்ததே. சற்றே விளக்கமாக அறிவோமா?

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். இது செய்வினை வாக்கியம். திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. இது செயப்பாட்டு வினை வாக்கியம்.

இராஜராஜ சோழன் தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டினான். இது தன்வினை வாக்கியம். இராஜராஜ சோழன் தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டுவித்தான் - இது பிறவினை வாக்கியம். செய்வினை வாக்கியமும், தன்வினை வாக்கியமும் அமைப்பில் ஒன்றுபோலவே இருக்கும். ஆனால் செய்வினையை செயப்பாட்டுவினையாக மாற்றுகின்றபோது படு - பட்டது என்ற துணைவினை சேர்கிறது. எழுவாய் இருந்த இடத்தில் செயப்படுபொருள் வந்துவிடுகிறது. ஆல் எனும் உருபு (ஒட்டுச் சொல்) இணைகிறது.

தன்வினை வாக்கியத்தைப் பிறவினையாக மாற்றும்போது வி, பி என்னும் இரண்டு எழுத்துகளுள் ஒன்று ஒட்டிக் கொள்கின்றது.

திருமுழுக்குச் செய்வித்தனர்.

செய்தனர் - தன்வினை, செய்வித்தனர் - பிறவினை (வி சேர்ந்தது)

பாடம் படிப்பித்தனர். படித்தனர் - தன்வினை, படிப்பித்தனர் - பிறவினை (பி சேர்ந்தது)

செய்வினை வாக்கியத்தை செயப்பாட்டு வினையாக மாற்றும் போது அத்தொடரின் பொருள் மாறாது. ஆனால் தன்வினை வாக்கியத்தைப் பிறவினையாக மாற்றும் போது அந்தத் தொடரின் பொருளே மாறிவிடும்.

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார் என்றாலும், திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது என்றாலும்




பொருள் ஒன்றே.

இராஜராஜன் பெரிய கோவிலைக் கட்டினான் எனும் தன்வினை வாக்கியத்தை, இராஜராஜன் பெரிய கோவிலைக் கட்டுவித்தான் என மாற்றும்போது, இராஜராஜன் அல்லாத கட்டிடப் பணியாட்கள் வாக்கியத்தில் நுழைந்து விடுகிறார்கள். பொருளில் பெரிய மாற்றம் உண்டாகிறது.

தன்வினை வாக்கியத்தைப் பொருள் மாறாமல் பிறவினை வாக்கியமாக மாற்ற முடியாது. ஆனால் செய்வினை வாக்கியத்தைப் பொருள் மாறாமல் செயப்பாட்டு வினையாக மாற்ற முடியும். இந்த வேறுபாட்டின் அடிப்படையைப் புரிந்து கொண்டால் இவ்விலக்கணக் குழப்பங்கள் ஏற்படாது.

**மாரனும் மாறனும்**

மாரன் எனும் சொல் மன்மதனைக் குறிக்கும். மாறன் எனும் சொல் பாண்டியனைக் குறிக்கும். முன்னது வடசொல். பின்னது தமிழ்ச்சொல். மன்மதனுக்குத் தனித் தமிழ்ச்சொல் வேள் என்பது. வேட்கையை உண்டாக்குபவர் என்பது பொருள். மன்மதன் கருநிறம் கொண்டவன். சிவந்த நிறமுடைய வேள் செவ்வேள் எனும் முருகப் பெருமான் ஆவான். சுகுமாரன் என்பது அழகிய மன்மதன் என்னும் பொருள் கொண்ட வடசொல். இதனைச் சிலர் சுகுமாறன் என்றெழுதுகிறார்கள். இது சரிதானா?

திருமாறன், நெடுமாறன், நன்மாறன் - இப்பெயர்கள் எல்லாம் தனித்தமிழ்ப் பெயர்கள். இந்தப் பெயர்களில் உள்ள மாறன் (பாண்டியன்) எனும் தமிழ்ப் பெயரை சுகு என்ற வடசொல்லோடு ஒட்டலாமா? அது சுகுமாரன் என்றே எழுதப்பட வேண்டும். சுகுமா-றன் என்று இருமொழியும் இணைத்துப் பொருளற்றதாக ஆக்கிவிடுதல் பிழை.

**வள்ளி - வல்லி எது சரி?**

இரண்டு சொற்களும் வெவ்வேறு பொருள் கொண்ட தமிழ்ப் பெயர்களே. முருகன் காதல் மணம் செய்து கொண்ட குறமகள் வள்ளி. வள்ளிக் கிழங்கு என்றொரு கிழங்கு உண்டு. அக்கிழங்கைத் தோண்டி எடுத்த பின் இருந்த குழியில் கிடந்தவள் குழந்தை வள்ளி. இன்றும் சர்க்கரை வள்ளிக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு பயன்பாட்டில் உள்ளன. வள்ளி தமிழ்ப் பெயரே.

வல்லி எனின் கொடி என்பது பொருள். வல்லிக் கொடி என்று (ஒரு பொருட் பன்மையாக) இணைத்தும் சொல்லுவதுண்டு. இன்பவல்லி, அமுதவல்லி, மரகதவல்லி எனும் பெயர்களில் பெண்கள் கொடி போன்றவர் எனும் மென்மை பற்றிய குறிப்பை அறிக.

ஆகவே, வள்ளி, தெய்வயானை பற்றிக் குறிக்கும் இடங்களில் மட்டுமே வள்ளி வர வேண்டும். பிறவாறு பெண் பெயர்களில் வல்லி வர வேண்டும். இவற்றை மாற்றிச் சேர்ப்பது சரியாகாது.

# சின்னச் சின்னதாய்...



"திரைத்துறையில் வெற்றியே பிரதானம். நான் தொடர்ந்து வெற்றியைக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் வெற்றியாளனாவேன். எனது முன்னோர்களான திரையுலக ஜாம்பவான்கள் பெற்ற அனுபவங்கள் எனக்குப் பாடமாக உள்ளன. அண்ணன் ராஜாவுக்கும் எனக்கும்தான் 'கெமிஸ்ட்ரி' ஒத்து வருகிறது என்கிறார்கள், இருக்கலாம். அவர் கதைக்கேற்ற நபர்களையே தேர்ந்தெடுப்பார். எனக்கேற்ற கதை யையும் அவ்வாறே தேர்ந்தெடுக்கிறார் - அவ்வளவுதான்" என்கிறார் ஜெயம் ரவி.



"முதன்முதலில் நான் நடிக்கப் போகிறேன் என்றதற்கு என் அம்மா "உன் தாத்தா மட்டும் உயிரோடிருந்திருந்தால் இதற்கு சம்மதித்திருக்கவே மாட்டார். இதைக் கேட்டு அவருக்கு மாரடைப்பே வந்திருக்கும்" என்றார். என் அம்மாவைப் பொறுத்தவரை டி.வி. சீரியல்கள், விளம்பரப் படங்களில் நடிப்பதற்கு ஓ.கே. ஆனால் சினிமா ஒத்துக்கொள்ளவே மாட்டார். அவர்களைப் பொறுத்தவரை சினிமா என்பது ஒரு மோசமான துறை. முதன்முதலில் நான் மலையாளப் படத்தில் நடிக்க ஒப்பந்தமானபோது என் அப்பாவையும், சகோதரியையும் சமாதானப்படுத்தி சம்மதம் வாங்கிவிட்டேன். அம்மா மறுத்துக் கொண்டேயிருந்தார். இறுதியில் படத்தின் ஹீரோவின் பெயரைக் கேட்டபின்தான் அம்மா சம்மதம் தெரிவித்தார். அந்தப் படத்தின் ஹீரோ மலையாள திரை யுலகின் ஜாம்பவான் மோகன்லால்" என்கிறார் வித்யா பாலன்.




அமிதாப் பச்சனின் மனைவி ஜெயா பச்சனுக்கு தினமும் ஒரு குறிப்பிட்ட நபரிடமிருந்து தொலைபேசி வர ஆரம்பித்தது. முதலில் மென்மையாகத் துவங்கி, பிறகு தொல்லையாக மாறியது. ஜெயா பச்சன் தான் யார் என்ற உண்மையைக்கூறிய பின்னரும் தொல்லை குறையவில்லை. மாறாக கூட ஆரம்பித்தது. பிறகு அமிதாப் பச்சன் உட்பட குடும்பத்தினருக்கு தெரிந்து அவர்கள் பேசியும் எதிராளி திருந்தவில்லை. அமிதாப் பச்சன் குடும்பத்தினர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். பொலிஸாரும் கண்காணித்து தகவல் டுபாயிலிருந்து வருவதாகக் கண்டுபிடித்தனர். டுபாய் பொலிஸ் மூலம் அந்த நபர் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா என்று ஆராய்ந்து வருகின்றனர்.



கவிஞர் வாலி தன்னை எழுதத் தூண்டிய வர்கள் என்று இருவரைக் குறிப்பிடுகிறார். ஒருவர் புதுக்கவிதையின் முன்னோடி என்று புகழப்படும் ந. பிச்சமூர்த்தி. இன்னொருவர், என்.எஸ்.கிருஷ்ணன். பொதிகை தொலைக்காட்சியில் வெளிவந்த அவரின் 82 வார நிகழ்ச்சியை "வாலிப வாலி" என்ற பெயரில் எழுத்தாக்கியிருக்கிறார் நெல்லை ஜெயந்தா. "வாலிப வாலி"யில் அவருக்கே உரித்தான பல நையாண்டிகள் வெளிப்பட்டிருக்கிறதாம்.



சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய விருதை தன்னுடைய 25 வயதிற்குள் இரண்டு முறை பெற்றிருப்பவர் ஸ்ரேயா கோஷல். அசாமி, பஞ்சாபி, வங்காளம், போஜ்புரி, குஜராத்தி, கன்னடம், மராத்தி, ஒடியா, மலையாளம், தமிழ், தெலுங்கு, நேபாளி ஆகிய மொழிகளில் திரைப்படங்களில் பின்னணி பாடியிருக்கிறார் ஸ்ரேயா கோஷல்.



"காந்தி" ஆங்கிலப் படத்தை இயக்கியவரும் 1997 - இல் 'ஜுராசிக் பார்க்' படத்தில் நடித்தவருமான ரிச்சர்ட் அட்டன்பரோ, 89 வயதை எட்டிய நிலையில் முதியோர் இல்லத்தில் சேர்ந்துள்ளார். நடக்க முடியவில்லை. சக்கர நாற்காலியைத்தான் பயன்படுத்துகிறார். லண்டனில் உள்ள 100 கோடி ரூபாய் பெறுமானமுள்ள வீட்டையும் விற்றுவிட்டு, தனது மனைவியுடன் முதியோர் இல்லத்தில் சேர்ந்திருக்கிறார்.



மதுரை ராயல் டாக்கீஸார் "சுதர்சன்" என்ற படம் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தார்கள். அதில் கதாநாயகனாக நடிக்க அந்தக்கால பிரபல நடிகர் பி.யூ.சின்னப்பாவை ஏற்பாடு செய்திருந்தார்கள். அவரைப் போலவே சொந்தக் குரலில் பாடி நடிக்கத் தெரிந்த ஒரு நடிகையை அவர்கள் தேடிக் கொண்டிருந்த போது, மதுரையில் இருந்த எம்.எல். வசந்தகுமாரி யை சந்தித்துக் கதாநாயகியாக நடிக்க சம்மதிக்கச் செய்தார்கள். கதாநாயகிக்கு உரிய மேக்-அப் போட்டுக் கொண்டு கமெராவின் முன் வந்து நின்ற வசந்தகுமாரிக்கு வசனங்களை சரிவர பேசி நடிக்க முடியவில்லை! பல ரீடேக்குகள் எடுத்தும் எதிர்பார்த்தபடி பேச வராததால் படத்தி லிருந்து அவரை நீக்கிவிட்டார்கள். வசந்தகுமாரி வருத்தப்படாமல், "சினிமாவில் நடிப்பு தைவிட கர்நாடக சங்கீதம் பாடிப் புகழ் பெறவே நான் விரும்பினேன். நல்லவேளை எனக்குச் சரியாக வசனம் பேசி நடிக்க வரவில்லை! சினிமா நடிகை ஆகாமல் கர்நாடக சங்கீதம் என்னைக் காப்பாற்றிவிட்டது" என்றாராம் சிரித்துக் கொண்டே.

# 'வில்லன்'களுக்கும் கோவில்!



இந்தியாவில் கான்பூர் நகரில் இராவணனுக்கு கோவில் உள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை தசரா விழாவின்போது மட்டும் இக்கோயில் திறக்கப்படும். விஜயதசமி அன்று பூசை நடைபெறும். திரளாக பக்தர்கள் வந்திருந்து இராவணனைத் தரிசிக்கின்றனர். இராவணன் சிறந்த பண்டிதனாகத் திகழ்ந்தான். திறமை யான அரசனாகவும் விளங்கினான். அதனால்தான் குறை களை நீக்கி, நற்குணத்தைக் கொண்டு அவனுக்கோர் கோவிலை நிறுவினர். இராவணனுடைய மனைவி மண்டோதரியின் தந்தை தெய்வத்தச்சன் மயனுடைய உறவினர் என்று கூறும் ஒரு சாரார் ராஜஸ்தான் ஜோத்பூரிலும் இராவணனுக்கு கோயில் எழுப்ப நினைக்கின்றனர். ஏனெனில் அங்கு உள்ளவர்கள் இராவணனின் மூதாதையர்களாம்.

அதேபோல, மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள துர்காம் என்ற கிராமத்தில் துரியோதனனுக்கு கோவில் உள்ளது. "கால்வாய்" எனப்படும் பழங்குடியினர் துரியோதனனை கடவுளாக வணங்குகிறார்கள். இந்தக் கோவில் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

# பலன் கருதி வேலை செய்யலாமா?

எண்பது வயதிலும் உழைத்துக் கொண்டிருந்த அந்த வயோதிபரை அனைவரும் பார்த்து ஏளனம் செய்து கொண்டிருந்தனர். அவர் மாங்கன்று ஒன்றை நட்டுக் கொண்டிருந்தார்.

அதைப் பார்த்த பலரும், "இன்றோ அல்லது நாளையோ சாகப் போகிற கிழவனின் ஆசையைப் பாருங்கள். மாங்கன்று நட்டுக் கொண்டிருக்கிறார். பழம் கிடைக்கும் வரை இந்தக் கிழம் உயிருடன் இருக்குமா?" என்று அவர் காதுபடவே பேசினர்.

ஆனால் அந்தக் கிழவர் அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் அவரது பணியைச் செய்து கொண்டிருந்தார்.



மக்களின் ஏளனப் பேச்சையும், கிழவர் மரக்கன்று நடுவதில் ஆர்வம் காட்டியதையும் அவ்வழியே வந்த மாமன்னர் பாபர் கவனித்தார். குதிரையை விட்டுக் கீழிறங்கி அந்தப் பெரியவரிடம் சென்றார்.

"பெரியவரே! இந்தக் கடும் வெயிலில், தள்ளாத வயதில் இப்படி உழைத்துக் கொண்டிருக்கிறீர்களே...? இதன் பலன் உங்களுக்குக் கிடைக்குமா?" என்றார்.

"மன்னா! எனது முன்னோர்கள் அவர்களது உழைப்பின் பயனை விட்டுச் சென்றதால்தான் நான் அதைப் பயன்படுத்திச் சிறப்பாக இருக்கிறேன். அதைப் போல் எனக்குப் பின்னால் வரும் தலைமுறைக்கு நானும் ஏதாவது செய்ய வேண்டாமா?" என்றார் அந்தப் பெரியவர்.

அந்தப் பேச்சு மன்னனின் மனதைத் தொட்டது. உடனே அவன் பணமுடிப்பு ஒன்றை அந்தப் பெரியவருக்குப் பரிசாக அளித்தான்.

மகிழ்ச்சியடைந்த பெரியவர், "மன்னா, பார்த்தீர்களா! மரம் வளர்ந்து, பூ பூத்துக் காய் காய்த்து அதன் பிறகுதான் அதை வைத்தவருக்குப் பலன் கிடைக்கும். ஆனால் எனக்குப் பாருங்கள்... இன்று இந்தக் கன்றை நட்டவுடனே கைமேல் பலன் கிடைத்து விட்டது" என்றார்.

மீண்டும் மகிழ்ச்சியடைந்த மன்னர், கிழவரின் பேச்சுத் திறனைப் பாராட்டியபடி, இன்னொரு பணமுடிப்பைக் கொடுத்து, "இதையும் வைத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

இரண்டாவது பணமுடிப்பைப் பெற்ற அந்தக் கிழவர், "மன்னா! மரம் வளர்த்தால் அது வருடத்திற்கு ஒரு முறைதான் பலனளிக்கும். எனக்குப் பாருங்கள். இந்தக் கன்றை நட்டவுடன் இரண்டு முறை பலன் கிடைத்து விட்டது" என்றபடி தன் பொக்கை வாயால் சிரித்தார்.

அந்தக் கபடமில்லாத சிரிப்பில் மயங்கிய மன்னர் மீண்டும் ஒரு பணமுடிப்பை அவரிடம் எடுத்துக் கொடுத்தார்.

உடனே அந்தக் கிழவர், "நம்மில் பலரும் அதைச் செய்தால் என்ன கிடைக்கும், இதைச் செய்தால் என்ன கிடைக்கும் என்று ஏதையாவது எதிர்பார்த்துத்தான் எதையும் செய்கின்றனர். எதிலும் கணக்குப் பார்த்துச் சுயநலத்துடன் செயற்படுவது சரியாகத் தெரியவில்லை..." என்றார்.

மன்னரும், "உண்மைதான்! உங்களைப் போன்ற வர்களின் உழைப்பை அடுத்த தலைமுறையினரும் அனுபவிப்பார்கள்! உண்மையான உழைப்பின் பயன் அடுத்து வரும் தலைமுறைக்கும் கிடைக் கும்" என்று அவரைப் பாராட்டிச் சென்றார்.

# மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

"துடுப்புக்கூடப் பாரமென்று கரையைத் தேடும் ஓடங்கள்" போல இலங்கைவாழ் மக்களின் வாழ்வியல் பயணம் இடைநடுவில் நிற்கப்போகின்றது.

ஒரு காலகட்டத்தில் இடப்பெயர்வுகள், இன்னல்கள், சொத்தழிவுகள் ஏற்பட்டும்கூட தமிழன் மீண்டும் தலைநிமிர்ந்து நிற்குமளவிற்கு அவனை உயர்த்தியது சேமிப்புப் பழக்கமே.

இன்று கடன் இல்லாத ஓர் தனிநபர் யாழ். குடாநாட்டில் இல்லை என்றே கூறலாம். "லீசிங்" எனும் மோகத்துக்குள் குடாநாடு உட்பட இலங்கை வாழ் மக்கள் மூழ்கடிக்கப்பட்டுள்ளார்கள். ஊதியத்தின் உதிரங்கள் எல்லாம் உணராத வட்டிக்கு உலையாகிறது இந்தக் கணப்பொழுதில் பெரும் பிரச்சினையொன்று பேரிடியோடு வந்துள்ளது.

அதுதான் மின்சாரக் கட்டண உயர்வு.

## அரசின் நியாயப்படுத்தல்

இதற்கான நியாயப்படுத்தல்கள் பல துருவங்களில் நகர்கின்றன. அதாவது மின்சார சபைக்கு 364 பில்லியன் ரூபா கடன் இருக்கிறது. இதனை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது. 30 தொடக்கம் 90 வரையான அலகுகளைப் பாவிக்கும் சாதாரணதர மக்களுக்காக அரசு 25 மில்லியன் ரூபா நஷ்டத்தைத் தாங்கிக் கொண்டுள்ளது. இதனால் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியே ஆக வேண்டும். என அரசு நியாயப்படுத்துகின்றது.

மின் கட்டண அதிகரிப்பால் ஏற்படும் இந்த சுமையினைத் தாங்க. மக்கள் தயாராக உள்ளார்களா? என்றால் அது வேதனைக்குரிய விடயங்களாகவே உள்ளது.

## மக்களின் துன்பம்

பல வழிகளில் வாழ்வியல் சுமை இப்போது மக்களை முற்றுகை இட்டுவிட்டது. எரிபொருள் உயர்ச்சியால் ஈடுகொடுக்க முடியாத சூழல் ஒரு துருவத்தில் மக்களை முற்றுகை இடுகின்றது. ஏறுகின்ற வாகனத்தில் இருந்து எரிகின்ற எரிவாயு வரை எல்லாமே அதிகரித்து விட்டது.

அத்துடன் ஆடம்பர வாழ்வியல் மனோபாவங்களும் வருவாய்க்கு மீறி வாலை நீட்டுகின்றது. கழுத்துப்பட்டி அணிந்து வருபவர்கள் ஒருபுறம் மக்களைக் கடனாளியாக்குகின்றார்கள்.




செலாவணிக்கேற்ப வருவாய்கள் இல்லாத துன்பங்கள் ஒருபுறம் வாட்டி வதைக்கிறது. விவசாயத்தில் விரக்தி நிலை தலைதூக்குகின்றது. வேளாண்மை செய்பவரைவிட இடைத்தரகர்கள் இதமாக உழைக்கின்றனர்.

ஏற்றுமதி இல்லை இருப்பினும் வரித் தொல்லை இப்படியாக தாங்கமுடியாத சுமைகளுடன் வாழும் மக்களுக்கு மின்சாரக் கட்டண உயர்வு பேரதிர்ச்சியினை ஏற்படுத்தி நிற்கின்றது.

## மின்னுபகரண பாவனையை எப்படிக் குறைப்பது?

90 அலகுகளை விட அதிகம் பாவிக்கும் நடுத்தர வர்க்கத்தினரே குடாநாடு உட்பட வடக்கு - கிழக்கில் அதிகம் உள்ளார்கள். இவர்களுக்கு பாரிய ஓர் தளம்பல் நிலையினை இம் மின்சார அதிகரிப்பு கொண்டுவரும். இதனை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளவேண்டும். இயலுமான வரை மாற்றங்களை இதில் கொண்டுவர வேண்டும்.

நடைமுறைக்கு வரவுள்ள அதிகரிப்புத் திட்டத்தை மக்களுக்கு சாதகமாகக் கொண்டுவர வேண்டியது அரசின் கடமையாகும். இன்னலைக் கண்டு இடர் விழுந்த நெஞ்சங்களாக வாழும் எமது மக்களுக்கு போ இடிகள் தொடர்ந்து வருமாயின் மின்னலிலிருந்து மின்னொளி கிடைக காதா என எதிர்பார்ப்பதில் தப்பிலலை.

பொருளாதார சுமை காரணமாகவும், வருவாய் நிலை வீழ்சசி காரணமாகவும் குடும்பததில் உள்ள ஆண், பெண் இருபாலாரும் வேலைக்குப் போகவேண்டிய தேவை தலைதூக்கியுள்ளது. இதனால் நேர முகாமை தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனால் நேரத்தை மீதப்படுத்த தெரிந்தோ, தெரியாமலோ மின்னுபகரணத்தை பாவிக்கவேண்டிய இக்கட்டு எழுகின்றது.

வெண்கட்டியன்

---




**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

### 1

கீழே சில ஆங்கில எழுத்துக்களும், குறியீடுகளும் தரப்பட்டுள்ளன. சில வினாக்களும், சில சொற்பதங்களும் தரப்பட்டுள்ளன.

இவை ஏதோ ஒரு ஒழுங்கு முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள் ளன. இவ் ஒழுங்கு முறையைக் கண்டுபிடித்து சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1) பாதம் என்பது பூதம் ஆயின் காதல் என்பது ..........................

2) பாசம என்பது சாபம் ஆயின் தாகம் என்பது ..........................

3) A, C,E என்பது B,D,F ஆயின் A,E,G என்பது ..........................

4) A,B,C என்பது Z,Y,X ஆயின் D,E,F என்பது ..........................

5) B,C,D என்பது A,B,C ஆயின் C,D,E என்பது ..........................

6) □ + △ என்பது 568 ஆயின் 658 என்பது ..........................

7) C,M,X என்பது D,N,Y ஆயின் C,T,R என்பது ..........................

8) A,B,C என்பது 123 ஆயின் E,B,A என்பது ..........................

9) R,A,T என்பது A,R,T ஆயின் T,E,A என்பது ..........................

10) + △ x என்பது A x B ஆயின் △+ x என்பது ..........................

### புதிர்போட்டி 41 இல் சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர் :- அ.வினோலியா
தரம் :- 10 - பாடசாலை:- யா/நெடுந்தீவு றோ.க.மத்திய கல்லூரி.

பெயர் :- அ.அஜின்சன்போல்
தரம் :- 05 - பாடசாலை:- யா/நெடுந்தீவு றோ.க.மத்திய கல்லூரி.

பெயர் :- அ.றொமிலா
தரம் :- 11 - பாடசாலை:- யா/நெடுந்தீவு றோ.க.மத்திய கல்லூரி.

பெயர் :- எ.கபிலஸ்
தரம் :- 3 - பாடசாலை:- யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

### 2

இங்கு காட்டப்பட்டுள்ள உருக்களின் அமைவை நன்கு புரிந்து சரியான விடையைச் சுற்றி வட்டமிடுக.

11) ◉ + ◉ + ◉ = 21 எனின் ◉ = ( 1, 3, 7)

12) ▱ = 40 எனின் △ = ( 6, 3, 8)

### புதிர்ப்போட்டி 41 இற்கான சரியான விடைகள்

**1**
1) 2
2) 1
3) 2
4) 3
5) 2

**2**
6) ஒக்ரோபர் - 15
7) மிசிசுபி
8) நைல்நதி
9) ஏப் ரல் - 23
10) மே - 10

**3**
1) 11 பேர்
2) 11 பேர்
3) 16 பேர்
4) 6 பேர்
5) 7 பேர்

### முக்கிய குறிப்பு

### அனுப்பவேண்டிய முகவரி

**புதிர்ப்போட்டி இல....**
**தினமுரசு**
**இல .373 பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**புதிர்ப்போட்டி 42 இற்கான விடைகளை மே 11 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.**

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

### விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர் :- ..............................
பாடசாலையின் பெயர் ..............................
தரம் :- :- ..............................
தொலைபேசி இல. :- ..............................
முகவரி :- ..............................
..............................

## அரச பொது ஊழியர் சங்க

# வருடாந்த புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக்கிளையின் புனரமைப்பும், அங்குரார்ப்பணக் கூட்டமும் அண்மையில் யாழ். வை.எம்.சி.ஏ மண்டபத்தில் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெற்றது.


இக்கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டக்கிளையின் 2013 ஆம் வருடத்திற்குரிய தொழிற்சங்க நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

மேலும், யாழ். மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்களில் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் கடமை புரியும் ஊழியர்கள் தொழில் ரீதியாக எதிர்நோக்கும் கஷ்டங்களுக்கும் அவர்களது தேவைகளுக்கும் உதவும் பொருட்டும், திணைக்களத் தலைவர்களுடன் சுமுகமான முறையில் நல்லுறவின் அடிப்படையிலும் இவ்வாறான பாதிக்கப்பட்ட ஊழியர்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் பற்றிக் கலந்து ஆராய்ந்து இவ் ஊழியர்களுக்கு உதவி செய்யும் பொருட்டும் இடம்பெற்றது என சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்துள்ளார்.

நிர்வாகிகள் தெரிவு வருமாறு,

எம்.மகேஸ்வரன் (யாழ். மாவட்ட இணைப்பாளர்), வி.வி. பொன்னம்பலம் (யாழ். மேலதிக மாவட்ட இணைப்பாளர்),

கே.அன்ரனி (வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பொறுப்பான தொழிற்சங்க இணைப்பாளர்), சாமசிறி நேசமானிய லயன் எஸ்.ஜெயசங்கர் (யாழ். மாவட்டக்கிளை மாவட்ட செயலாளர்), கே.சசீகரன் (யாழ். மாவட்ட கிளை மேலதிக மாவட்டச் செயலாளர் மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பிரதேச செயலகப் பிரிவு இணைப்பாளர்கள்), கே.ரவீந்திரன் (தென்மராட்சி பிரதேச செயலகப்பிரிவு தொழிற்சங்க இணைப்பாளர்), சி மனோகரன (யாழ்ப்பாணம் பரதேச செயலகப்பிரிவு தொழிற் சங்க இணைப்பாளர்), ரி.கெனடி (நெடுந்தீவு பிரதேச செய்லகப்பிரிவு தொழிற் சங்க இணைப்பாளர்), ஜே.ஆர்.யோகதாஸ் (வேலணைப் பிரதேச செயல்கப் பிரிவு தொழிற்சங்க இணைப்பாளர்), ப.புண்ணியமூர்த்தி (கராய்ச்சி பிரதேச செயலகப் பிரிவு இணைப்பாளர், உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொறுப்பான இணைப்பாளர்), எம்.சிவசன்முகராசா (யாழ். மாநகரசபை தொழிற்சங்க இணைப்பாளர்) ஏ.இல்மன் (யாழ். மாநகர சபை தொழிற் சங்க இணைப்பாளர்), மு.தர்ம குலசிங்கம் (வல்வெட்டித்துறை நகரசபை தொழிற் சங்க இணைப்பாளர்), கே.வீரசிங்கம் (சண்டிலிப்பாய் பிரதேச சபை தொழிற் சங்க இணைப்பாளர்), கே.பாஸ்கரன் (கொடிகாமம் பிரதேச சபை தொழிற் சங்க இணைப்பாளர்), வி.சிறிதரன் (வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபை தொழிற்சங்க இணைப்பாளர்), சு.அமல்ராஜ் (வலி.தெற்கு பிரதேச சபை தொழிற்சங்க இணைப்பாளர்), எஸ்.கப்பீரியல் (கராய்ச்சி பிரதேச சபை தொழிற் சங்க இணைப்பாளர்).



## பரமர் சங்கமம்

'வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும' ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும' என்பது அரச திணைக்களங்க ளால் வழங்கப்படும் கலைஞர் விருது கள், இலக்கியப் பரிசுகளின் தெரிவுக ளின் போது திரும்பத்திரும்ப மேடை ஏறுகின்ற விடயமாகவே இருந்து வரு கிறது.

கொழும்பைத் தளமாகக் கொண்டு வெளியிடப்படுகின்ற 'ஞானம்' இலக்கியச் சஞ்சிகையின் 155ஆவது 2013 ஏப்ரல் இதழில் 'அரச இலக்கிய விருது வழங்கல் 2012' பற்றிய குறிப்புகளில் க.மலர்விழி சில விடயங்களைக் கவனத்துக்குத் தந்துள்ளார்.

நிபந்தனைகளை மீறி விருது பெற்றதாகக் கருதப்படும் நூல்களென சிறந்த நாவலாகத் தெரிவு செய்யப்பட்ட 'சொடுதா' சமூகத்துக்குச் சொல் லப்போகும் செய்தியென்ன? எனக்கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

'தோட்டுப்பாய் மூத்தம்மா' இது காவியமல்ல நீண்ட கவிதை என் றும் வெள்ளிவிரல், பரிசுக்குத் தெரிவான சிறுகதை நூல்களில் ஒன்று நிலம் பிரிந்தவனின் கவிதை மேற்கூறிய இருநூல்களும் இலங்கை யில் பதிப்பிக்கப்படவில்லை.

'கருவறையில் இருந்து' நாட்டுக்கூத்தை நாடகமாகக் கொள்ளாததன வெற்றி எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. 'ஒரு சிறங்கைப் பேரீச்சம் பழங் கள' மற்றும் அம்மாவின் இரகசியம் ஆகிய இரண்டையும் தலா ஒவ் வொரு குற்றம் சுட்டப்பட்டுள்ளது.

நூல்களை தெரிவு செய்யும் நடுவர்களான 12 பேர்களில் 9பேர்கள், பேராசிரியர்கள். இவர்களில் மூவருக்கு கவிதை ஆற்றலும் அவ் மூவ ரில் ஒருவர் நாடக நடிப்பு ஆற்றுப்படுத்தல் அனுபவங்கள் மேலதிகமாக உண்டு.

ஏனைய பேர்களுக்கும் படைப்பிலக்கிய அனுபவம் இல்லாத வர்கள், விமர்சனம் பேச்சு தவிரவும் ஆய்வுக் கட்டுரைகளை நூலாக்கி உள்ளனர். அந்த 9 பேராசிரியர்களில் ஒருவர் சாகித்திய ரத்னா உயர் விருதுக்குத் தெரிவாகியுள்ளார்.

மற்றொரு பேராசிரியர் 2001 இல் வெளியிடப்பட்ட நாவல் நூலுக்கு அணிந்துரை வழங்கிவிட்டு வெளியீட்டுவிழா மேடையில் அமரரான எழுத்தாளர் 'செம்பியன் செல்வன' 94 பக்கங்களுடைய படைப்பை நாவலாக ஏற்க முடியுமா? எனக்கேள்வி எழுப்பியதும் அவரோடு கூடக் கோரஸ் பாடியவர்.

மற்ற மூவர்களில் ஒருவர் புலவர் எஸ்.முரளிதரன் என்பவர் நீண்ட காலமாக இக்குழுவில் இருந்து சில வருடங்களுக்கு முன்பாக 'குறிஞ்சித் தென்னவன' என்னும் மலையகக்கவிஞரின் கவிதைகளைத் தொகுத்து வெளியிட்ட நூலுக்கு 50 ஆயிரம் ரூபாவை கிடைக்கச் செய்துதானே அருட்டிக் கொண்ட தில்லுமுல்லு வெளியாகி நாற்றமெடுத்த போதும் ஏதோசெல்வாக்கில் அந்தக் குழுவில் நீக்கப்படாமல் இன்றைக்கும் அங்கம் வகிக்கிறார்.

'ஞானம' இதழாசிரியர் சாகித்திய மண்டலப் பரிசுகளில் குள றுபடிகள் என்பது வரலாறுகண்ட விடய்மாகி விட்டது. ஈழத்தமிழ் இலக்கியங்களுக்கான விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் கேலிக்கும் நகைப்புக்கும் இடமாகி விடக்கூடாதென விநயமாக அடிக்குறிப்பு எழுதி இருப்பதையும் சுட்டிக்காட்டலாம்.

ஒண்டின் தயவு இன்னொண்டிற்குத் தேவை எண்டால் இப்படியுமா? 'ஆழிசூழ் உலகத்தில்' திருத்த முடியாத நபர்களே இல்லையப்பா' இந்த வசனத்தை எழுதிய கலைஞரையே..: முடியாமல் இருக்கேக்க இன் னும் சொல்லவா வேண்டும்... சொல்லுங்க பாப்பம்..:




# யதார்த்த அரசியல் ஏன் செத்துப்போனது?

இன்று ஏதோ ஓர் மூலையில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்ந்தாலும் நடந்து முடிந்த இழப்புக்களும் துன்பங்களும், துயரங்களும் எம் மக்களை விட்டு என்றும் கலையாது. பிணங்களின் மேலே பீதியில் படுத்திருந்த கணங்களும், மக்களின் [மகன், மகள்] உயிரைக் காக்க முடியாது மறுவாழ்வு தேடி ஓடிய வரலாறுகளும் என்றுமே எம் மனங்களை விட்டு நீங்காத நினைவலைகள்.

இதற்கெல்லாம் எது காரணம்? யார் காரணம்? 76 வீத பெரும்பான்மையோடு 24 வீத சிறுபான்மை போராடி வெல்ல முடியாது என்கின்ற யதார்த்த அரசியல் சிந்தனை ஏன் செத்துப்போனது? இதை யார் சாகடித்தார்கள்?... ஆங்காங்கே பொசிக்கின்ற அரசியல் இலாபத்துடன் வாழ்ந்திருந்தால் அத்தனை உயிர்களும் பிழைத்திருக்குமல்லவா? தியாகங்கள், ஓர்மங்கள், உணர்வுகள் என்கின்ற பெயரில் அம்புலிப்பாடம் நடத்திய அரசியலால்தான் அரைப்பங்கிற்கு மேலான உயிர்களைப் பலிக்கடாக்களாக்கியது. இறுதியில் நடந்தது என்ன? தமிழீழம் கிடைத்ததா? தனிநாடு கிடைத்ததா? சுயநிர்ணய உரிமை கிடைத்ததா? ஐந்தம்சக் கோரிக்கை நிறைவேறியதா? இடைக்கால நிர்வாகம் கிடைத்ததா? சமஷ்டி கிடைத்ததா? யாருக்காகவும் அரசியல் பேசவேண்டாம். யதார்த்த அரசியலைப் புரிந்து கொள்ளுங்கள்.

மக்கள் நிம்மதியாக வாழ்வதற்குத்தான் அரசியல் நிலைகுலைந்து போவதற்கு அல்ல. தியாகங்களை மதிக்க வேண்டும், தலைவணங்க வேண்டும் என்றால் தியாகங்கள் என்கின்ற பெயரில் எது நடந்தது? அர்த்தமற்ற அரசியல் பின்னணியால் வந்த உயிரிழப்புக்களெல்லாம் தியாகங்கள் அல்ல இந்தப் போராட்டம் எதைத் தமிழ் மக்களிற்கு சாதகமாகக் கொண்டு வந்தது சற்றுச் சித்தித்துப் பாருங்கள்.

இழப்புக்களைத் தவிர எதை எமக்கு சாதகமாக்கினோம். இந்த உந்துதல்களுக்குப் பின்னணியில் இருக்கும் ஊடகங்களாலும் தமிழ் மக்களின் இழப்பு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### ஊடகங்களும் திரிபுபட்ட செய்திகளும்

பொய்மையை உண்மையாகத் திரிபுபடுத்திய செய்திகளை பத்திரிகைத் தர்மத்துக்கு அப்பால் வெளியிட்ட பத்திரிகையாளர்கள் இழப்புக்களைக் கண்டு இதமாக ஒதுங்கிவிட்டனர். இதற்கு அப்பால் இன்னும் சலசலத்துக்கொண்டு இருக்கின்ற ஒருசில பத்திரிகைகள் மக்களை மீண்டும் வேள்வித்தீயில் தள்ளிவிட இருக்கிறார்கள். இதனை மக்கள் சீராகப் புரிந்துகொள்ளவேண்டும்.

இலங்கையில் வாழப்போகும் நாம், வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் அர்த்தமற்ற கோரிக்கைகளை முன்வைத்து புவியியல் சர்ச ஙத்திற்கு அப்பால் சிந்திக்க முடியாது. ஏன் இந்த யதார்த்தத்தைப் பத்திரிகைகள் அறிவியல் ரீதியாக சிந்தித்து முன்வைக்க மறுக்கின்றன. கொள்கையளவு விரிவாக்கங்களே பத்திரிகைக் கட்டுரைகளாகின்றது. மட்டுப்படுத்தப்பட்ட ஆசிரிய பீடப் பார்வைகளே கட்டுரையாளர்களின் வெளியீடுகளாகின்றது. சுய சிந்தனை யதார்த்தப் பார்வை என்பது கட்டுரைகளில் அற்றுவிட்டது. பெரும்பான்மை மக்கள் அர்த்தமற்ற அரசியல் பார்வைகளைக் கொண்டுள்ளனர் என்பதற்காக அவர்களிற்கு சாதகமாக கட்டுரை எழுதுவதன்மூலம் கட்டுரை மக்கள் மத்தியில் எடுபடும் என்பது இவர்களின் எதிர்பார்ப்பாகுமே தவிர யதார்த்த அரசியலை மக்களிற்கு விளங்க வைக்க இந்தப் பத்திரிகைகள் தவறி விடுகின்றன.

### புலம்பெயர் மக்கள் போராட்டம்

இலங்கையில் வாழுகின்ற நாம் தான் எமது வாழ்வியல் அர சியலை தீர்மானிக்க வேண்டும். புலம்பெயர் மக்கள் தீர்மானிக்கும் அரசியலால் நாம் வாழமுடியாது. ஏனெனில் அவர்களின் சுதந் திரப்பார்வை அவர்கள் சிந்தனைக்கு எட்டும் அரசியல் எமது இக்கட்டுகளிற்குப் பெருந்தாது. இது மேலும் பல அரசியல் சிக்கல்களைக் கொண்டுவரும் என்பது எவர்க்கும் புரியவில்லை. பெரும்பான்மை சிங்கள அரசியல்வாதிகளின் மத்தியில் எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பது சுலபமான விடயமல்ல.

### தீர்வுக்கு வழி

ஒவ்வொருவரும் முதல் சுயசிந்தனையுடன் அரசியலைப் பார்க்க வேண்டும். உந்துதல்கள் மூலம் கொள்கையளவில் உருவாக்கப்பட்ட அரசியல் பார்வைகளை நிறுத்தவேண்டும். எமக்கு எது சாதகமானது, எது சாத்தியப் படக்கூடாது, எது எம்து சந்ததியை வாழவைக்கும், எது அவல சரித்திரத்திறகு சாவு மணியடிக்கும் என்பது பற்றி சிந்திப்பதே எமது பிரச்சினைகளிற்கு முதல் தீர்வாக அமையும். இது வசதிகளை அனுபவிப்போரின் ஓய்வுநேர விளையாட்டு அல்ல! அடிப்படை வசதிகளுக்கே அல்லாடுவோரின் வாழ்க்கை! யதார்த்த அரசியல்பார்வை ஒவ்வொருவரிடத்திலும் வரவேண்டும். இதுவே இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முதற்படி.

- வெண்கட்டியன


# இலங்கையுடன் முரண்பாடு உறவில் விரிசல் இல்லை

## இந்தியத்தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையுடன் சில முரண்பாடுகள் காணப்படுவதாக இந்தியா தெரிவித்துள்ளது. சில சந்தர்ப்பங்களில் இலங்கையுடன் சில விடயங்களில் முரண்பாடு காணப்பட்ட போதிலும் அது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசலை ஏற்படுத்தாது என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கேகாந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



முரண்பாடுகளைக் களைந்து அர்த்தமுள்ள வகையில் உறவுகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியரின் பங்களிப்பு முக்கியமானது என அவர குறிப்பிட்டுள்ளார். ரயில்பாதை அமைத்தல், தொலைத்தொடர் பாடல் முறைமையை வடக்கில் உருவாக்குதல், பலாலி விமான நிலைய் புனரமைப்பு உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

# மாணவர்கள் முன்னிலையில் அதிபர், ஆசிரியர் சண்டை

மாணவர்கள் மத்தியில் அதிபரும் ஆசிரியரும் சண்டையிட்ட சம்பவம் ஒன்று சங்கானை கல்விக் கோட்டத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற மெய்வன்மைப்போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இந்தவேளையில் குறித்த அதிபரின் பையில் இருந்த ஒரு புத்தகத்தை அவரின் அனுமதியின்றி எடுத்தமை சம்பந்தமாக எழுந்த வாக்குவாதம் இறுதியில் கைகலப்பில் முடிவடைந்துள்ளது. இதனை வேறு ஆசிரியர்களும் மாணவர்களும் பார்த்துக் கொண்டு இருந்துள்ளார்கள். இரு சாராரும் தமக்கு சாதகமான விபரங்களைக கூறுகின்ற போதிலும், ஆசிரியரும் அதிபரும் மாணவர்கள் மத்தியில் இவ்வாறு சண்டையிட்டுக் கொண்டமை பெற்றோர்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது சம்பந்தமாக வலிகாமம் கல்வி வலயத்தினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதாரம் வீழ்ச்சியடைய அரசின் செயற்பாடுகளே காரணம்

## கூறுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

இலங்கையில் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்வதற்கு பிரபாகரன் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. ஆனால் அவையனைத்தையும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முறியடித்து இலங்கையின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்துள்ளது என்று ஐ.தே.கட்சி எம்.பி.தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

எனது அரசியல் ஐ.தே.கட்சியுடனேயே தொடரும் இதில் ஒரு போதும் மாற்றத்திற்கு வழியில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

குருநாகல் மாளிகாபிட்டிய மைதானத்தில் இடம்பெற்ற ஐ.தே.கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே தயாசிறி ஜயசேகர எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அன்று விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் நாட்டில் குண்டுகளை வெடிக்கச் செய்து பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார்.

ஆனால், அம் முயற்சிகள் அனைத்தும் தோல்வி கண்டன. பிரபாகரனால் முடியாததை இந்த அரசாங்கம் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது. ஊழல் மோசடிகள், தரகுப் பணங்கள் என அரசாங்கத்திற்குள் அனைத்துக் குளறுபடிகளும் தலைவிரித்தாடுகிறது.

இதன் காரணமாகவே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இதனைத் தடுப்பதற்கு எதுவிதமான வழிமுறைகளையும் அரசு கையாள்வதில்லை.

மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியது தொடர்பில் அமைச்சர்களுக்குள்ளேயே குடுமிபிடிச் சண்டை நடக்கின்றது. இவ் அதிகரிப்பிற்கு அமைச்சர்கள் அல்ல நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டும்.

மத்தள விமான நிலையம் பெரும் தொகை கடனைப் பெற்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆனால, இதுவரையில் இங்கு 40 பயணிகள் மாத்திரமே வந்துள்ளார்கள். அம்பாந்தோட்டையில் துறைமுகம் அமைக்கப்பட்டது. ஆனால், அங்கு கப்பல்கள் வருவதில்லை. இவ்வாறு நாட்டில் பொருளாதார வீழ்ச்சி தொடர்ந்து கொண்டே உள்ளதென்றும் தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவித்தார்.

# 2015 இல் மக்கள் நல ஆட்சி; நம்பிக்கையுடன் பொன்சேகா

(கொழும்பு)

2015ஆம் ஆண்டில் இந்த அரசாங்கத்தைக் கவிழ்த்து மக்கள் நல ஆட்சியொன்று உருவாக்கப்படும் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். பெலவத்தை புத்ததாச மண்டபத்தில் நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன்னும் ஐந்து தலைமுறைகளை இந்த அரசாங்கம் கடனாளியாக்கியுள்ளது. நாட்டை கடனிலிருந்து மீட்டெடுப்பது மிகவும் சவால் மிக்கதாகவே அமைந்துள்ளது. இந்த நாட்டு அரசியல்வாதிகள், தொழிலாளர்களை தங்களது தேவைகளுக்காக பயன்படுத்தி வந்தனர். இதனால் தொழிலாளர் வர்க்கம் தொடர்ச்சியாக துன்பங்களை அனுபவித்து வந்தது. தொழிலாளர் உரிமைகளுக்காக போராடிய இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

கொடுப்பதன்னை வாங்கி உண்டு அமைதியாக இருக்க வேண்டும் என்பதே இந்த அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். 30 ஆண்டு போரை முன்னெடுத்த படை வீரர்களை இந்த அரசாங்கம் நடத்தும் விதம் வருத்தமளிக்கின்றது. ஆட்சியாளர்களின் பிள்ளைகள் கார் பந்தயத்தில் ஈடுபடுவதற்கான பாதைகளுக்கு மணல்மூட்டைகளை சுமக்கும் கூலித்தொழிலாளிகளாக படை வீரர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

18ஆம் திருத்தச்சட்டத்தின் மூலம் இந்த ஆட்சியாளர்கள் நீண்ட காலம் ஆட்சியில் இருக்க முயற்சிக்கின்றனர். தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதே எமது கட்சியின் நோக்கமாக அமைந்துள்ளது. அரசியல்வாதிகள் தங்களது குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இனவாதத்தை தூண்டி வருகின்றனர் எனத் தெரிவித்தார்.

# ஊழியர் சேமலாப நிதியின் மூலம் 40 மில்லியன் வீடமைப்புக்கடன்

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியத்தின் மூலம் கடந்த 12 வருடங்களில் 1, 91, 928 அங்கத்தவர்களுக்கு 40,747 மில்லியன் ரூபா வீடமைப்புக் கடனாக வழங்கப்பட்டுள்ளதாக நிதிய ஆணையர் டீ. பீ. கே. ஆர். வீரக்கோன் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியின் அங்கத்தவர்களுக்கு இதுவரை 75 வீதம் கடனடிப்படையில் நிதி வழங்கப்பட்டது.

செலுத்தப்பட்ட பணத்தில் 30 வீதத்தை மீண்டும் திரும்பிப் பெறாத அடிப்படையில் கடன் வழங்கவும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. வீட்டு நிர்மாணப் பணி, ஆபத்தான நோய் நிலைமை போன்றவற்றுக்கும் கடன் முறையை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக புதிய சட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

உழைக்கும் வர்க்கத்துக்கு நன்மைகளை வழங்க தொழிலமைச்சு வேலைத் திட்டத்தை பலமூட்டியுள்ளதாக ஆணையர் வீரக்கோன் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் பாதுகாப்புக் குறித்து அரசு முறையான திட்டத்தைத் தயாரித்துள்ளது.

நிதியம் தொடர்பாகத் தெரிவிக்கப்படும் தவறான செய்திகளுக்கு ஏமாறவேண்டாமென்றும் ஆணையர் கேட்டுள்ளார்.

உழைக்கும் மக்களின் வாழ்வு நிலைமையை மேம்படுத்த தொழிலமைச்சர் காமினி லொக்குகேயின் உத்தரவின் பேரில் விசேட வேலைத் திட்டம் அமுலாக்கப்படுவதாகவும் அவர் தொடர்ந்து தெரிவித்தார்.

# தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடம் நிரப்பப்படும்

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளுக்கான சகல பாடங்களுக்கும் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படும். இதற்காக ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் இரு மாதங்களுக்குள் இந்த வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். ஹோமாகம மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தில் புதிய மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் விழா வில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.


இக்கல்லூரி தெற்காசியாவிலேயே பெரிய கல்லூரி மட்டுமல்ல இக்கல்லூரி தெற்கு ஆசியாவிலேயே சிறந்த மாணவர்களை உருவாக்கும் கல்லூரியாக மாற்றப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

புதிய தொழில்நுட்ப பாடநெறிகள் சகல தேர்தல் தொகுதிகளிலும் உள்ளடங்கும் வண்ணம் ஜூன் 15 ஆம் திகதி 200 பாடசாலைகளில் ஆரம்பமாகும். பாடசாலைகளைத் தரப்படுத்தலில் உயர் தரம் கொண்டவை 1 ஏ.பி.பாடசாலைகளாகும்.

தொழில்நுட்பப் பாடங்களை உள்ளடக்கிய பாடசாலைகள் 1 ஏ.பி.சி.என வேறாக தரப்படுத்தப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இம்முறை க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் 1.4 வீதமானோர் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

இக்கல்லூரியின் உயர் வகுப்புகளுக்கு ஐந்துக்கும் மேற்பட்ட ஏ.சித்திகளைப் பெற்ற மாணவர்கள் சேர்க்கப்படுவர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.



**முன்னாள் யாழ்.நகரபிதா அமரர் எஸ்.எஸ்.நவரட்ணம் நினைவாக கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்தில் கல்விகற்கும் அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட மேற்படி கல்லூரியின் முன்னாள் அதிபர் க.செல்வகுமாரன் மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதைக் காணலாம்.**

4) 'லப்டப்' சத்தம் ஏற்படக் காரணம் யாது?

..........................................................................................

..........................................................................................

5) மாரடைப்பு ஏற்படக் காரணம் யாது?

..........................................................................................

..........................................................................................

## பகுதி - 2 B

**விரும்பிய மூன்று வினாக்களுக்கு விடை தருக**

01) 1. ஆவியுயிர்ப்பு என்றால் என்ன?

2. ஆவியுயிர்ப்பினால் தாவரத்திற்குக் கிடைக்கும் நன்மைகள் 2 தருக.

3) ஆவியுயிர்ப்பினை அதிகரிக்கச் செய்யும் காரணிகள் 4 தருக.

4) ஆவியுயிர்ப்பைக் குறைப்பதற்காக தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கல்கள் 2 தருக.

02) 1) சுவாசத் தொகுப்பின் பகுதிகளை ஒழுங்குமுறையில் தருக.

2) சுவாசப் பொறிமுறை என்றால் என்ன?

3) சுவாசப் பொறிமுறையில் பங்குபற்றும் தசைகளைத் தருக.

4) சுவாசத் தொகுதி தொடர்பான 2 நோய்களைத் தருக.

03) 1) இழையம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக?

2) தாவரங்களில் காணப்படும் பிரதானமான இருவகை இழையங்களையும் தருக.

3) காழ் இழையத்திலுள்ள கல வகைகளைத் தருக.

4) புடைக்கலவிழையத்தின் தொழில்கள் 2 தருக.

5) உரியத்திலுள்ள கலவகைகளைத் தருக.

04) 1) பாகுபாடு என்றால் என்ன?

2) பாகுபாட்டின் இரு வகைகளையும் தருக.

3) தாவரப் பாகுபாட்டின் இருவகைகளையும் தருக.

4) ஒருவித்திலை, இருவித்திலைத் தாவரங்களுக்கிடையிலான பிரதான வேறுபாடுகள் 3 தருக.

5) வித்துக்களைத் தோற்றுவிக்காத தாவர வகுப்புகள் 2 தருக.



# கிளி/ எடிசன் கல்லூரியும் -தினமுரசு பத்திரிகையும் இணைந்து நடாத்தும் வருடமொரு கல்விச் செயலமர்வு -2013



தரம் - 10

## விஞ்ஞானம்

நேரம்: 2 மணி

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1) உயிரங்கிகளினது தொழிற்பாட்டு அலகு
1) கலம் 2) இழையம் 3) அங்கம் 4) தொகுதி

2) பின்வரும் அங்கிகளினுள் இடம்பெயர முடியாதது
1) ஓணான் 2) லீச் 3) திலாப்பியா 4) கடல்அனிமனி


3) பின்வருவனவற்றுள் ஒளித்தொகுப்பிற்கு அவசியமற்ற காரணி
1) காபனீரொட்சைட்டு 2) ஒட்சிசன் 3) பச்சையம் 4) ஒளி

4) மனிதனின் நியமக் குருதி அமுக்கம்
1) $\frac{80}{120}$ 2) $\frac{120}{80}$ MMHS 3) $\frac{200}{800}$ MMHS 4) $\frac{80}{200}$ MMHS

5) சர்வ வாங்கிக் குருதி வகை
1) O 2) A
3) AB 4) B

6) கனமேலணி காணப்படும் பகுதி
1) போமனின் உறை 2) வியர்வைச் சுரப்பி
3) சுவாசப்பை 4) களம்

7) எயிட்ஸ் நோயினை ஏற்படுத்துவது,
1) பக்றீரியா 2) பங்கசு
3) புரட்டோசோவா 4) வைரசு

8)  இப்பக்றீரியா வகை
1) கொக்கஸ் 2) பசிலஸ்
3) ஸ்பிரில்லம் 4) விப்ரியோ

9) பின்வரும் அங்கியின் சிறப்பியல்புகளைக் கருதுக.
- மாறா உடல் வெப்பநிலை கொண்டது.
- நான்கு அறைகளையுடைய இதயத்தைக் கொண்டது.
- மூளை நன்கு விருத்தியடைந்தது.
இவ் அங்கி வகை யாதாக இருக்கலாம்.
1) சிலந்திறேற்றா 2) அனலிடா
3) நகருயிர் 4) பறவை

10) குருதியில் அதிகளவில் காணப்படும் கூறு,
1) கலங்கள் 2) புரதங்கள்
3) நீர் 4) விற்றமின்

11) மனிதனின் பெயரீட்சைச் சரியாகக் குறிப்பது
1) Home sapience 2) HOME SAPRENCE
3) home Sapifnce 4) Home Sapience

12) தாவரக் கலத்திற்கும் விலங்குக் கலத்திற்குமான பிரதான வேறுபாடு
   1) கலச்சுவர் காணப்படல்
   2) புன்வெற்றிடம் காணப்படுதல்
   3) குழியவுரு காணப்படுதல்
   4) இழைமணி காணப்படுதல்

13) நோயுற்ற ஒருவரின் குருதியில் அதிகளவில் காணப்படக்கூடிய வெண்குழிய வகை
   1) ஒற்றைக்குழியம்
   2) நிணநீர்க்குழியம்
   3) நடுநிலை
   4) மூலநாடி

14) ஒளித்தொகுப்பின் ஆரம்ப விளைபொருள்
   1) மாப்பொருள்
   2) குளுக்கோசு
   3) புரதம்
   4) செலுலோசு

15) ஒரு கனசென்ரிமீற்றரில் காணப்படக்கூடிய குருதிச் சிறுதட்டுக்கள்
   1) 250,000
   2) 25,000
   3) 2500
   4) 250

16) பின்வருவனவற்றுள் காசநோயை ஏற்படுத்தும் காரணி
   1) பசிலஸ் ரியூக்குளோசிஸ்
   2) பசிலஸ்துரொயென்சி
   3) கியூமோனியே
   4) பிளாஸ்மோடியம்


17) பின்வருவனவற்றுள் கடத்தும் இழையம்
   1) புடைக்கலவிழையம்
   2) மையவிழையம்
   3) காழ்
   4) வில்லியம் ஹரர்வே

19) பின்வரும் எதன் சுவாச மேற்பரப்பு தோல் ஆகும்.
   1) மட்டைத்தேள்
   2) மண்புழு
   3) கிவி
   4) வௌவால்

20) மனித இதய அடிப்பு வீதம்
   1) 72 செக்கன்
   2) 72 நிமிடம்
   3) 72 மணித்தியாலம்
   4) 108 செக்கன்

## பகுதி - 2 A
## அமைப்புப் கட்டுரை
### எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01) மாணவர் குழு ஒன்று களப்பயணம் மேற்கொண்டு தாம் அவதானித்த அங்கிகளை பட்டியல்ப்படுத்தியது.




1) முள்ளந்தண்டிலிகள் தருக?
........................................................................
........................................................................


2) இடம்பெயர முடியாத அங்கி எது?
........................................................................
........................................................................

3) ஆத்திரோப்போடாவைச் சேர்ந்த அங்கி எது?
........................................................................
........................................................................

4) நகருயிர் ஒன்று தருக?
........................................................................
........................................................................

5) துண்டுபடலைக் காண்பிக்கும் அங்கிகள் எவை?
........................................................................
........................................................................

02) உடல் முழுவதும் பதார்த்தங்களைக் கொண்டு செல்வதில் குருதித் தொகுதியின் பங்களிப்பு இன்றியமையாதது ஆகும்.




1) A - ..............................    B - ..............................
   C - ..............................    D - ..............................
   E - ..............................

2) D தடிப்பாகக் காணப்படக் காரணம் யாது?
........................................................................
........................................................................

3) A,C இற்கு இடையில் காணப்படும் வால்பு எது?
........................................................................
........................................................................

# பாகிஸ்தான் கைதிமீது ஜம்மு சிறையில் தாக்குதல்

ஜம்முவில் உள்ள கோட் பல்வால் சிறையில் 50இற்கும் மேற்பட்ட பாகிஸ்தான் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சனாவுல்லா ஹக் என்பவனும் ஒருவன். நேற்றக் காலை கோட் பல்வால் சிறைக் கைதிகளுடன் ஏற்பட்ட மோதலில் சனாவுல்லா ஹக், சக கைதிகளால் தாக்கப்பட்டான்.

இதனையடுத்து, அவனை சிறை அதிகாரிகள் ஜம்மு அரச மருத்துவ கல்லூரி வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

முன்னாள் இந்திய இராணுவ வீரரால் தாக்கப்பட்ட சனாவுல்லாவிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும், அவன் 'கோமா' நிலையில் உள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் சிறையில் கடுமையாக தாக்கப்பட்டு, 'கோமா' நிலையில் ஒரு வார காலம் உயிருக்குப் போராடிய சரப்ஜித் சிங் நேற்று மரணமடைந்தார்.

அவரது இறுதிச் சடங்கு சொந்த ஊரில் நேற்று அரச மரியாதையுடன் நடைபெறுகிறது. இந்தநிலையில், ஜம்மு சிறையில் பாகிஸ்தான் கைதி ஒருவர் தாக்கப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கச்சதீவை மீட்பதற்கு ஜெயலலிதா தீர்மானம்


(சென்னை)



இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்சதீவை மீட்க வலியுறுத்தி தமிழக சட்டசபையில் முதல்வர் ஜெயலலிதா தனித் தீர்மானம் ஒன்றைத் தாக்கல் செய்தார். தமிழக சட்டசபையில் முதல்வர் ஜெயலலிதா நேற்று கச்சதீவை மீட்பது தொடர்பான தீர்மானத்தை தாக்கல் செய்தார்.

அப்போது பேசிய அவர், தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க கச்சதீவை மீட்பதே நிரந்தர வழியாகும். 1974ஆம் ஆண்டு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்ட கச்சதீவு மற்றும் அதை சுற்றிய பகுதிகளை இந்திய ஆளுகையின் கீழ் கொண்டு வர வேண்டும். இதன் மூலமே தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் தடுத்து நிறுத்தப்படும். கச்சதீவை மீட்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

# முகமது அலி பாணியில் எதிரிகளுக்குப் பதிலடி



பிரபல குத்துச் சண்டை முகமது அலி பாணியில் இந்தியாவும் அதன் எதிரிகளுக்கு தக்க சமயத்தில் பதிலடி கொடுக்கும் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார். தெற்காசியாவில் மண்டல தொழில் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான சர்வதேச மாநாட்டின் தொடக்கவிழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் சல்மான் குர்ஷித் பேசியதாவது: இந்தியாவுக்கு என தனி வசீகரமும் சிறப்பியல்புகளும் உள்ளன. அவற்றை ஆண்டாண்டு காலமாக நாம் கடைப்பிடித்தும் மேம்படுத்தியும் வருகிறோம்.

எம்மிடம் மாபெரும் ஆற்றல் இருக்கிறது எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும் வல்லமை இருக்கிறது. நமக்கென்று ஒரு பாரம்பரியம், நற்பெயர் இருக்கிறது. அதை முதலில் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். எந்த விஷயத்திலும் அவசரம் காட்டக்கூடாது எதற்கெடுத்தாலும் யாருடனும் சண்டையிட்டுக் கொண்டிருக்க முடியாது. பொறுமையும் நிதானமும் கூடிய புத்திசாலித்தனத்துடன் பிரச்னைகளை அணுக வேண்டும்.

இந்த விஷயத்தில் பிரபல குத்துச் சண்டை வீரர் பாணியை இந்தியா கடைப்பிடிக்கிறது. அவர் தன்னுடன் மோதும் வீரர்களை உடனடியாகத் தாக்க மாட்டார். அவர்கள் முதலில் தாக்கும்போதும் உடனடியாகத் தாக்காமல் தற்காப்பிலேயே ஈடுபடுவார். எதிரிகள் களைப்படையும் வரை காத்திருப்பார். தன்னுடைய சக்தியை தேவையில்லாமல் விரயம் செய்யமாட்டார். இறுதியில் இடது கையால் ஒரே குத்து எதிரி தரையில் விழுந்து கிடப்பார். அதுபோல தான் நாமும் அவசரப்படக் கூடாது தேவையில்லாமல் நம்முடைய ஆற்றலை வீணடித்து விடக் கூடாது. தாக்குவதற்கு தக்க நேரம் வரும் வரை நிதானமாக இருந்து முகமது அலி பாணியில் தாக்குவோம் என்றார் சல்மான் குர்ஷித்




புற்றுநோய் ஏற்படுத்தும் அபாயம்

# ஜோன்சன் அன்ட் ஜோன்சன் உற்பத்திகள் இடைநிறுத்தம்



(மும்பை)

பிரபல ஜோன்சன் அன்ட் ஜோன்சன் நிறுவனத்தின் முலுந்த் தொழிற்சாலையில் அழகுசாதன பொருட்களை தயார் செய்யும் உரிமத்தை உணவு மற்றும் மருந்து நிர்வாகம் இடைநிறுத்தி வைத்துள்ளது

ஜோன்சன் அன்ட் ஜோன்சன் குழந்தைகள் பவுடரின் 15 பேட்ச்களில் நச்சுத்தன்மை வாய்ந்த பொருட்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டன. இதையடுத்து கடந்த 2007ஆம் ஆண்டு ஜோன்சன் அன்ட் ஜோன்சன் நிறுவனம் மீது வழக்கு தொடரப்பட்டது. குழந்தைகளுக்கு பயன்படுத்தப்படும் பவுடரை நச்சுத்தன்மை வாய்ந்த எதிலீன் ஆக்சைட் கொண்டு ஸ்டெரிலைஸ் செய்யப்படுவதால் பவுடரில் நச்சுத்தன்மை கொண்ட பொருட்கள் இருந்துள்ளன.

இதையடுத்து மும்பை முலுந்தில் உள்ள ஜோன்சன் அன்ட் ஜோன்சன் ஆலையில் அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்கும் உரிமத்தை உணவு மற்றும் மருந்து நிர்வாகம் இடைநிறுத்தி வைத்துள்ளது. இந்த உத்தரவு வரும் ஜூன் மாதம் 24ஆம் திகதிமுதல் அமலுக்கு வருகிறது. இந்த விவகாரம் குறித்து உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் துணை ஆணையாளர் கம்லேஷ் பி.ஷிண்டே கூறுகையில், புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய எதிலீன் ஆக்சைட் ஜோன்சன் அன்ட் ஜோன்சன் பேபி பவுடரில் அதிக அளவில் இருந்தது. அதனால் தான் உரிமத்தை சஸ்பெண்ட் செய்தோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# அன்புமணி ராமதாஸ் சென்னையில் கைது



முன்னாள் மத்திய அமைச்சர் அன்புமணி ராமதாஸ் கைது செய்யப்பட்டுள்ளார். இன்று காலை சென்னை தி நகரில் பொலிஸார் அன்புமணியை கைது செய்துள்ளனர். அவரை திருக்கழுகுன்றம் நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்தினர். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை 15 நாள் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

கடந்த 2012ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் அன்புமணி நேரம் கடந்து பேசியதாக ஏற்கனவே வழக்குபதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்றுக்காலை சரியாக 6 மணியளவில், உதவி ஆணையர் ராஜேந்திரன் தலைமையில் 20இற்கும் மேற்பட்ட பொலிஸார் அன்புமணி வீட்டுக்குச் சென்று இந்த வழக்கு தொடர்பாக அவரைக் கைது செய்தனர். இதே வழக்கில் குரு எம்.எல்.ஏ.இரு தினங்களுக்கு முன்னர் சென்னையில் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சரப்ஜித்சிங்கின் உடல் சொந்த ஊரில் தகனம்



பாகிஸ்தானில் சிறைக்கைதிகளால் தாக்கப்பட்டு லாகூர் மருத்துவமனையில் மரணமடைந்த சரப்ஜித் சிங் உடல் நேற்று முன்தினம் மாலை ஏர் இந்தியா சிறப்பு விமானம் மூலம் லாகூரில் இருந்து பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் வந்தது. பின்னர், அவரது சொந்த கிராமமான பிகிவிண்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன் அரச மரியாதையுடன் நேற்றையதினம் தகனம் செய்யப்பட்டது. இந்த இறுதி நிகழ்வில் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல்காந்தியும் கலந்து கொண்டார்.

மேலும், பஞ்சாப் மாநில அரசு சரப்ஜித்சிங் குடும்பத் துக்கு ரூ.1 கோடி நிதி உதவி அறிவித்ததுடன், மூன்று நாள் அரச முறைத் துக்கம் அனுஷ்டிக்கவும் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இதை அடுத்து அரச அலுவல கக்கட்டடங்களில் அரைக்கம் பத்தில் கொடி பறக்கவிடப்படும்.

அதேவேளை, சரப்ஜித் சிங் கொலை பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.யின் திட்டமிட்ட சதியாக இருக்கலாம் என முன்னாள் இந்திய உளவாளி மெஹ்பூத் இலாஹி தெரிவித்துள்ளார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ......................................

முகவரி : ......................................

பிறந்த ஆண்டு : ......................................


கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

......................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிர்சுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# தங்கச் சுரங்க விபத்தில் சூடானில் அறுபது பேர் பலி



(டர்பர்)

சூடானில் இடம்பெற்ற தங்கச் சுரங்க விபத்தில் 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழநதுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்பிரிக்க நாடான சூடானின் எண்ணெய் வளம்மிக்க பகுதியான தெற்கு சூடான் சமீபத்தில் பிரிந்து சென்றது. இதையடுத்து அந்நாட்டின் எண்ணெய் வருமானத்தின் 75 சதவிகித இழப்பு ஏற்பட்டது.

டர்பர் பகுதியில் இருக்கும் தங்கச் சுரங்கங்கள்தான் அந்த நாட்டின் முக்கிய வருமானமாக மாறியிருக்கின்றன. இந்த ஆண்டில் 50 தொன் தங்கம் வெட்டியெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் கடந்த திங்களன்று வடக்கு டர்பரில் உள்ள ஜாபெல் அமிர் சுரங்கத்தில் 40 மீற்றர் ஆழத்தில் தங்கம் வெட்டி எடுத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென அந்தச் சுரங்கம் இடிந்து விழுந்தது. இதில் 60 இற்கும் மேற்பட்டோர் பலியானதாகக் கூறப்படுகிறது. மேலும் சுவர்கள் இடிந்து விழும் நிலையில் இருப்பதால் மீட்புப்பணிகள் முடங்கியுள்ளன.

இதனால் நவீன கருவிகளைப் பயன்படுத்தாமல், பழங்காலக் கருவிகளைக் கொண்டு மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த டர்பர் தங்கச் சுரங்கங்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நடைபெறும் மோதலில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் ஊரைவிட்டு வெளியேறி, அகதிகள் முகாமில் வாழ்ந்து வருகின்றனர்.

# பெனாஷிர் பூட்டோ வழக்கு; சட்டத்தரணி சுட்டுக்கொலை



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஷிர் பூட்டோவின் கொலை தொடரபான விசேட வழக்குத் தொடுநர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சௌத்திரி சுல்பிக்கார் அலி என்ற வழக்குத் தொடுநரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த தாக்குதல்தாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இவர் படுகாயமடைந்ததைத் தொடர்ந்து உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

மேலும், இத்துப்பாக்கிச் சூட்டில் இன்னுமொருவர் கொல்லபபட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஷிர் பூட்டோ 2007 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின்போது குண்டுத் தாக்குதலுக்கும், துப்பாக்கிச் சூட்டுக்கும் இலக்காகி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் 70 ஆயிரம் படையினர் பாதுகாப்பு

பாகிஸ்தானில் நாடாளுமனறத்திற்கு வரும் 11 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. எனினும் ஜனநாயக ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து, இஸ்லாமிய மதச்சட்டப்படி ஆட்சியமைக்க பாகிஸ்தான் தலிபான் இயக்கம் தீவிரமாக உள்ளது.

இந்தச் சூழ்நிலையில், பாகிஸதான் வரலாற்றிலேயே முதல் முதலாக ஒரு ஜனநாயக ஆட்சி நிறைவு பெற்று புதிய தேர்தலை சந்திக்கிறது.



அந்தத் தேர்தலையும் சீர்குலைத்து, தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவோரையும் தாக்கிக் கொல்வோம் என்று தீவிரவாதிகள் மிரட்டி வருவதுடன்,

தேர்தல் அலுவலகங்கள் மீதும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் நாடு முழுவதும் தேர்தலின்போது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் 70 ஆயிரம் இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று இராணுவ செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

மேலும் 50 ஹெலிகொப்டர்கள் ஆகாயத்திலிருந்து கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளும் என்றும் அது கூறியுள்ளது.

உலகச் செய்திகள்

# இரண்டரை இலட்சம் மக்கள் சோமாலிய பஞ்சத்தால் மரணம்



ஆபிரிக்க தீவகற்பப் பகுதியில் அமைந்துள்ள சோமாலியா தான் உலகிலேயே பஞ்சத்தால் அதிகம் பாதிக்கப்படும் நாடு என்று ஐ.நா. அறிக்கை தெரிவித்துள்ளது.

இங்கு கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட பஞ்சம் மற்றும் உணவு பாதுகாப்பின்மையால் இதுவரை 2 இலட்சத்து 58 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

இதில் பாதிப்பேர் அதாவது, 5 வயதிற்கு உட்பட்ட ஒரு இலட்சத்து 33 ஆயிரம் குழந்தைகள் இறந்துள்ளதாகவும் ஐ.நா. அறிக்கை கூறுகிறது.

மேலும் கடந்த 20 வருடங்களாக நடைபெற்ற உள்நாட்டு சண்டையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள சோமாலியாவில், பன்னாட்டு உதவியாளர்களுக்கு பெரும் அச்சுறுத்தல் இருப்பதாக கூறப்படுகிறது.

கடந்த 1992 ஆம் ஆண்டு சோமாலியாவில் மட்டும் வறட்சியால் 2 இலட்சத்து 20 ஆயிரம் பேர் இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# படையினரை மீளப்பெறுவதற்கு காலக்கெடு விதிக்க முடியாது

## சீனா அறிவிப்பு

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்திலுள்ள லடாக் பகுதியில் ஊடுருவிய படைகளை மீளப்பெற காலக்கெடு நிர்ணயிக்க முடியாது என சீனா அறிவித்துள்ளது. இது தொடர்பாக சீன பேச்சாளர் குவா சுன்யிங் கூறியதாவது,

சீனப் படைகள் சீனப் பகுதிக்குள் வழக்கமான ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளன. அந்தப் படைகள் அங்கிருந்து வெளியேறுவது குறித்து காலக்கெடு எதுவும் நிர்ணயிக்க முடியாது. இப்பிரச்சினை குறித்து இந்தியாவும், சீனாவும் தொடர்பு கொண்டுள்ளன.

பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன. இந்தப் பிரச்சினையில், பேச்சுவார்த்தை மூலம் விரைவில் சுமுக தீர்வு ஏற்படும் என்று நம்புகிறோம். அதே சமயத்தில், எல்லையில் அமைதி நிலவ வேண்டும். அதுதான், இரு நாடுகளுக்கும் நல்லது. இரு நாடுகளும் இப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளும் வல்லமை படைத்தவை.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், எதிர்வரும் 9 ஆம் திகதி சீனாவுக்கு வருகிறார். அவரது பயணத திட்டம் குறித்து உரியநேரத்தில் அறிவிக்கப்படும் என அவர் கூறினார்.

# சிரிய கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதம் கவனம் செலுத்துகிறது அமெரிக்கா

சிரிய கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை வழங்குவது குறித்து அமெரிக்கா கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிரிய கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதம் வழங்குவது தொடர்பிலான நிலைப்பாட்டை தமது அரசாங்கம் தொடர்ந்தும் மூடி மறைக்காது என அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் சக் ஹேகல் தெரிவித்துள்ளார்.



கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை வழங்குவது குறித்து ஆராயப்பட்டு வருவதாக முதல் தடவையாக அமெரிக்க சிரேஷ்ட அதிகாரியொருவர் பகிரங்கமாக அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஆயுதங்களை வழங்கும் திட்டத்திற்கு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கடந்த ஆண்டு எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆயுதங்களை வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்ற போதிலும் இதுவரையில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மேலும் 10 நாளிதழ்கள் வெளியிட அனுமதி அளித்தது மியான்மர்

(ரங்கூன்)

மியான்மர் நாட்டில் மேலும் 10 நாளிதழ்களைத் தனியார் வெளியிடுவதற்கான அனுமதியை அந்நாட்டு தகவல் தொடர்புத்துறை அமைச்சகம் வழங்கியுள்ளது.

இதில் அமெரிக்காவின் இன்டர்நஷனல் ஹெரால்ட் டிரிபியூனும் மியான்மரிலிருந்து வெளியிடுவதற்கான அனுமதியைப் பெற்றுள்ளது. மியான்மரில் ஜனநாயகப் பாதை மலரத் தொடங்கியதால் அண்மையில் 16 தனியார் நாளிதழ்களுக்கு 50 ஆண்டுகளுக்குப் பிறகு அனுமதி அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மேலும் 11 நாளிதழ்கள் அச்சிடுவதற்கான அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்டிருந்தன. இதில் 10 இற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது அனுமதி கொடுப்பட்டதில் அமெரிக்காவின் இண்டர்நஷனல் ஹெரால்ட் டிரிபியூனும் அடங்கும். மியான்மர் நாட்டில் வெளிநாட்டு ஆங்கில செய்தித்தாள் ஒன்று அச்சிடுவதற்கு தற்போதுதான் முதல் முறையாக அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# வியாபாரிகள் திரண்டு ஆர்ப்பாட்டம் பத்திரிகையாளர்களுக்கு நகரசபை கதவடைப்பு

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை பகுதியில் சிறுசிறு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் நகர சபைக்குட்பட்ட பொதுச்சந்தைகளில் வியாபாரத்தை மேற்கொள்ளுமாறும் பொது இடங்களில் வியாபாரத்தை மேற்கொள்ளக்கூடாது என கோரிக்கை முன்வைத்து இப்பிரதேசத்தில் குத்தகை எடுப்போர், வரிகட்டுவோர் இணைந்து நேற்று ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.



இப்பிரதேசத்தில் சிறுசிறு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் பொது இடங்களில் வியாபாரத்தை மேற்கொள்வதால் குத்தகைக்கு கடைகளை எடுத்து வியாபாரத்தை மேற்கொள்வோர் மற்றும் வரிகட்டுபவர்கள் பாதிக்கப்படுவதாகவும், இதனைக் கண்டிக்கும் வகையிலே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் சிறுசிறு வியாபாரத்தை நகர சபையே தடைசெய், நியாயமான கோரிக்கைக்கு நகரசபை நீதி தா, கிராமச் சந்தை என்ற போர்வையில் நகரத்தின் வளர்ச்சியை பிரிக்காதே, மரக்கறிச் சந்தை, மீன் சந்தை முறைப்படி இயங்க அனுமதி வழங்கு, நகர சபையே கோழிக்கடைகளின் சுகாதார சீர்கேட்டை முறைப்படி ஒழுங்குபடுத்து போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டம் வல்வெட்டித்துறை மீன்சந்தையில் இருந்து ஆரம்பமாகி வல்வெட்டித்துறை சந்தியில் வல்வெட்டித்துறை பொலிஸார் அவர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது அவர்கள் ஆர்ப்பாட்டம் தொடர்பாக தெரிவித்ததையடுத்து பொலிஸ் பாதுகாப்புடன் நகர சபை கட்டடத்தை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நகரசபையில் மாதாந்தக் கூட்டம் நேற்று நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை இவர்கள் வாயிலில் நின்ற சமயம் ஆளுங்கட்சியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நகரசபை உபதலைவர் எஸ்.சதீஸ் மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் அவர்களை உள்ளே அழைத்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாகவும் இதன்போது நகரசபை தவிசாளர், தான் இது தொடர்பாக ஆலோசித்து உரிய தீர்வை பெற்றுத்தருவதாக உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்திற்கு பத்திரிகையாளர்களை அனுமதிக்கவில்லை எனவும், ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்டதாகவும் இதனால் பத்திரிகையாளர்கள் விசனமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (116)

# இந்தியாவிலிருந்து கஞ்சா யாழ். குடாவுக்கு கடத்தல்

## இந்தியர்கள் உட்பட அறுவர் கைது

இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்ட 101 கிலோ 850 கிராம் கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடல் மார்க்கமாக கேரளா கஞ்சாவை விட விசேடமான கஞ்சாவை தாம் கைப்பற்றியதாகவும் இது தொடர்பில் 6 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் துந்துக்காய், பாம்பன், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 29, 26,23,20 வயதுகளைக் கொண்ட 4 சந்தேகநபர்களும் வேலணை கிழக்கைச் சேர்ந்த 49, 27 வயதுக்குட்பட்ட சந்தேகநபர்களுமாக 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இக்கஞ்சாவின் பெறுமதி இன்னமும் விலை மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவித்தார். இக்கஞ்சா கடத்தல் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சிறுமி மீது பலாத்காரம் புரிந்தவருக்கு சிறைவாசம்

கட்டப்பிராய் பகுதியைச் சேர்ந்த 5 வயது சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இச்சம்பவம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாலியல் துஷ்பிரயோகம் சம்பந்தமாக விநாயகர் வீதி, கொக்குவிலைச் சேர்ந்த 59 வயது மதிக்கத்தக்க சந்தேகநபர் கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ)

# கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 8 விக்கெட்டுக்களால் இலகு வெற்றி



(கொல்கத்தா)

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 47 ஆவது லீக் போட்டி நேற்று கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணித் தலைவர் ராவிட் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

ராஜஸ்தான் அணியின் தொடகக வீரர்களாக வட்சன் - ரஹானே களம் இறங்கினார்கள். ரஹானே 6, வட்சன் 35, சாம்சன் சிறப்பாக விளையாடி 40, ஒவைஷ் ஷா 24 ஓட்டங்களும் எடுத்தனர். இதனால் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 6 விக்கெட் இழப்பிற்கு 132 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் சேனநாயக்க 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதையடுத்து 133 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா விளையாடியது. 17.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றியீட்டியது.

துடுப்பாட்டத்தில் கம்பீர் 12, பிஸ்லா 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். கலிஸ் 33, பதான் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# பற்றைகளை வெட்டியபோது கிளம்பிய மனித எலும்புக்கூடு

(மாதகல்)

மாதகல் - சில்லாலைப் பகுதியில் மனித எலும்புக்கூட்டின் எச்சங்கள் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள சனசமூக நிலைய காணியை துப்புரவு செய்தவர்களே அங்கிருந்த பற்றைக்குள்ளிருந்த இந்த எலும்புக்கூட்டு எச்சங்களைக் கண்டுள்ளனர்.

ஒரு மண்டையோடு மற்றும் கால் எலும்பு என்பனவே காணப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இது குறித்து கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (54)

## பிடைபெறுகிறார்...

பெற்றுள்ளார். இந்நிலையில் அசோக் கே. காந்தா மற்றும் அவரது பாரியார் ஆகியோர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்து பிரியாவிடை பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு தொடர்பில் அசோக் கே. காந்தா ஆற்றிய பங்களிப்புத் தொடர்பில் தமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இதனிடையே இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இந்திய வெளியுறவுத்துறையின் மூத்த இராஜதந்திரிகளில் ஒருவரான வை.கே.சிங்ஹா நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## காசோலை....

செய்ததாகக் கூறி கோவில் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 62 வயதுள்ள பிரஸ்தாப சந்தேகநபரை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த 29 ஆம் திகதி யாழ். நகரப்பகுதியில் இரண்டு இலட்சம் ரூபாவைப் பெற்று காசோலையைக் கொடுத்து பணமோசடி மேற்கொண்டதாக முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை வியாபார நோக்கத்திற்காக மூன்று இலட்சம் ரூபாவுக்கு காசோலை கொடுத்து மோசடி செய்ததாக கரணவாயைச் சேர்ந்த முறைப்பாட்டாளர் ஒருவரினால் அம்மன் வீதி, நல்லூரைச் சேர்ந்த சந்தேகநபர் மீது முறையீடு செய்யப்பட்ட நிலையில் பிரஸ்தாப சந்தேகநபர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இவ்வாறே காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் நரக்கண்டி வீதியைச் சேர்ந்த ஒருவரினால் 5 இலட்ச ரூபா காசோலை மோசடி தொடர்பில் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சந்தேகநபர் தலைமறைவாகியிருப்பதால் பொலிஸார் லன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் இவ்வாறான விடயங்களில் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்றும் இப் பத்திரிகையாளர் சந்திப்பில் பொலிஸ் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. (இ)

## உருளைக்கிழங்கிற்கு இறக்குமதி வரி அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கிற்கான இறக்குமதி வரி கிலோவிற்கு 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விலை அதிகரிப்பு நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது. உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாகவே இந்த வரி அதிகரிப்பு என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## அரசியல்...

வேண்டியது மிக அவசியம் என அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஜே.வி.பி. இன் சார்பில் கலந்து கொண்ட சட்டத்தரணி சுனில் வட்டவல தமிழ் நாட்டில் உள்ள இலங்கை அகதிகளையும் வாக்காளர் பட்டியலில் இணைத்துக் கொண்ட முறை தொடர்பில் பிரச்சினை நிலவுவதாக குறிப்பிட்டார்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில், வடக்கு தேர்தல் குறித்து ஜனாதிபதி இதுவரை தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கவில்லை எனத் தெரிவித்தார்.

## புலிகள்...

அகழ்வாராய்ச்சி திணைக்கள அதிகாரிகள், நாரா நிறுவனத்தின் அதிகாரிகள், அரசாங்க பகுப்பாய்வு பிரிவு அதிகாரிகள், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய சிரேஷ்ட சட்டத்தரணிகள், அரசாங்க அளவைத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்டோரே மேற்படி விமானத்தின் பாகங்கள் விழுந்து கிடப்பதாகத் தெரிவிக்கப்படும் பகுதிக்குச் சென்றனர்.

பலாலி விமான நிலையத்திலிருந்து கடந்த 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 29 ஆம் திகதி 48 பயணிகள், 6 விமானப் பணியாளர்கள் மற்றும் இரு உக்ரேனிய விமானிகளுடன் இரத்மலானைக்குப் போகப் புறப்பட்ட இந்த விமானம், புறப்பட்டு 10 நிமிடங்களின் பின் ராடர் திரையிலிருந்து மறைந்துபோனது.

விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலில் இந்த விமானம் வீழ்த்தப்பட்டதாக நம்பப்படுகின்றது. இருப்பினும், இதன் மர்மம் இன்னும் பூரணமாகத் துலங்காத நிலையில் மேற்படி விமானத்தின் பாகங்களை கடற்படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினருக்கு, மேற்படி விமானத்தின் பாகங்களை மீட்குமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

## மீன்பிடி...

செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

குருநகர் மீன்பிடி வலை உற்பத்தி நிறுவனத்தின் உபகரணங்களுக்கென இந்திய அரசாங்கம் 166 மில்லியன் ரூபா நிதியினை சிறு அபிவிருத்தி நன்கொடைத் திட்டத்தின் கீழ் வழங்கியிருந்தது. இதில் மீன்பிடி வலை தயாரிப்பதற்கான உபரகணங்கள், அகல இழுவை இயந்திரம், நீள இழுவை இயந்திரம், கொதிகலன், சாயமிடும் இயந்திரம், நைலோன் நாருரி இழை நூல் என்பன உள்ளடங்குகின்றன. மேலும் இத்திட்டத்திற்காக இலங்கை அரசாங்கம் 22 மில்லியன் ரூபா நிதியினை வழங்கியிருந்தது.

குருநகர் மீன்பிடி வலை உற்பத்தி நிறுவனம் மீண்டும் புனரமைக்கப்பட்டமை வடமாகாணத்தில் பொருளாதார வாழ்வாதார மேம்பாட்டை ஏற்படுத்தும் ஒரு முக்கியமான செயற்பாடாகவும் மகிந்த சிந்தனை எதிர்கால தொலைநோக்கில் வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான அம்சமாகவும் நோக்கப்படுகின்றது.

# மூன்றாம் ஆண்டு நிறைவில் 'சிகரம்' ஊடக இல்லம்

# புதிய அலுவலகத்தில் பணிகள் ஆரம்பம்



கடந்த 2009ஆம் ஆண்டு முதல், ஊடகம் மற்றும் கல்வி-தொழில் வழிகாட்டல் சேவையில் ஈடுபட்டுவரும் சிகரம் நிறுவனத்தின் மூன்றாண்டு நிறைவு மற்றும் புதிய அலுவலகத் திறப்பு விழா நேற்றுக்காலை 10.மணியளவில் இலக்கம் 153, பலாலி வீதி, கந்தர்மடத்திலுள்ள புதிய அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது. சிகரம் நிறுவனப் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் பொறியியலாளரும், யூரோவில் நிறுவனத்தின் உத்தியோத்தருமான சூரியசேகரம், அலுவலகத்தின் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ் மாவட்ட பணிப்பாளர் ஈஸ்வரராஜா நாடாவை வெட்டி புதிய அலுவலகத்தை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, கல்வித் திணைக்களத்தின் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள், இளைஞர் விவகார அமைச்சின் திறன்விருத்தி உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், துறைசார் வல்லுனர்கள் பலரும் மங்கல விளக்குகளை ஏற்றி, சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டல் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர்.

2009ஆம் ஆண்டு சிகரம்தொடு என்கின்ற இளைஞர் கல்வி-தொழில் வழிகாட்டல் மாதமிருமுறை ஏடாக வெளியானதுடன் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த சிகரம் நிறுவனத்தின் பணிகள், தொடர்ந்து, ஊடகப் பயிற்சி நெறி, தென்னிலங்கை மற்றும் சர்வதேச ஊடகவியலாளர் சந்திப்புக்கள், நூல் வெளியீடுகள், கல்வி-தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள், சர்வதேச கல்விக் கண்காட்சிகள் என, 2013ஆம் ஆண்டு வரையில் பல துறைகள் சார்ந்து விரிவாகி வந்துள்ளது.

சிகரம் நிறுவனத்தின் இந்தப் பணிகள் தொடர்பாக விளக்கும் வகையில் அமைந்திருந்த கண்காட்சியில், சிகரம் நிறுவனத்தின் வெளியீடுகள், சந்தைப்படுத்தல் பிரிவின் முயற்சிகள் தொடர்பான பிரசுரங்கள், பதாகைகள், தமிழ் மொழியில் முதன் முதலாக சிகரம் நிறுவனத்தின ரால் வெளியிட்டு வைக்கப்பட்ட கல்வி-தொழில் வழிகாட்டி விபரக்கொத்து, கல்வி-தொழில் வழிகாட்டி மாத வெளியீடுகள் மற்றும் சரவதேச பல்கலைக்கழகங்களின் கற்கை நெறி விளக்க வெளியீடுகள் பலவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

சிகரம் நிறுவன பணிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சிகரம் நிறுவனத்தின் ஆரம்பம் மற்றும் அதன் பணிகள் தொடர்பாக விளக்கும் விசேட வீடியோ காண்பியம் காட்சிப்படுத்தப்பட்டது.

தொடர்ந்து, யாழ்ப்பாணத்தில் சிகரம் நிறுவனத்தின் பணிப்பாளர் றுஷாங்கனால், தூர நோக்கோடு யாழ்ப்பாணத்தின் அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் அதன் செயற்பாடுகள் தொடர்பில், சிகரம் நிறுவனத்துடன் ஆரம்ப காலம் முதல் இணைந்து பணியாற்றிவரும் கவிஞரும், ஊடகவியலாளருமான எஸ்.கருணாகரன் உரையாற்றினார்.

அவரைத் தொடர்ந்து, காலத்தின் அவசர தேவையை உணர்ந்து சிகரம் நிறுவனம் ஆரம்பித்துள்ள கல்வி-தொழில் வழிகாட்டல் சேவைகள் தொடர்பில் சிலாகித்துப் பேசிய பொறியியலாளர் சூரியசேகரம், இந்தப் பணிகள் எவ்வாறு வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் உரையாற்றினார்.

ஆங்கில ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றி தற்போது பளை பிரதேச சபை உறுப்பினராக இருக்கும் அன்ரன் அன்பழகன், வன்னிப் பகுதியில் இப்போது அவசியமாக இருக்கும் கல்வி-தொழில் வழிகாட்டல் சேவைகள் தொடர்பில் விளக்கவுரையாற்றினார்.

## உணவுப்பொதியில் நத்தை; சூத்திரதாரிக்கு தண்டம்

உணவுப் பொதியில் "அவித்த நத்தை" இருந்தமையினால் சிற்றுண்டிச்சாலை உரிமையாளருக்கு எல்பிட்டிய நீதவான் 3000 ரூபா தண்டம் விதித்துள்ளார்.எல்பிட்டிய வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் நீல் குமாரவிற்கே எல்பிட்டிய நீதவான் கேசர சமர தீவாகர மேற்கண்டவாறு தண்டம் விதித்துள்ளார்.

நீதிமன்றில் ஆஜராகிய எல்பிட்டிய சுகாதார பரிசோதகர் யு.கே.டி ரஞ்சித் வைத்தியசாலையிலுள்ள குறித்த சிற்றுண்டிச்சாலையில் தாதியொருவர் 40 ரூபாவிற்கு உணவுப் பொதியை கொள்வனவு செய்துள்ளார். அந்த உணவு பொதியில் சுமார் 30-35 கிராம் நிறையில் அவித்த நத்தையொன்று இருந்தது என்றும் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

## கடன் அட்டை மோசடி ஒன்பது பேர் சிக்கினர்

இணையத்தின் ஊடாக 263 மில்லியன் ரூபா கடனட்டை மோசடியில் ஈடுபட்ட ஒன்பது சந்தேகநபர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் சந்கேநபர்கள் நேற்று கோட்டை நீதவன் திலினகமகே முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் குறித்த பணத்தை அரச சார்பற்ற இரண்டு நிறுவனங்கள் ஊடாக வெளிநாட்டிலுள்ள பயங்கரவாத அமைப்புகளுக்கு வழங்கியுள்ளார்களா என்பது குறித்து தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும் 10 சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.பல்வேறு நபர்களின் கடனட்டைகள் மூலம் இந்த பண மோசடி இடம்பெற்றுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதின்றில் தெரிவித்துள்ளது.

## யாழில் பொலிஸ் தேடுதல் வேட்டை; சந்தேக நபர்கள் பலர் கைது

(யாழ்ப்பாணம்)

பல்வெறு குற்றச் செயல்களில் ஈடுபட்டமை தொடர்பில் கடந்த வாரத்தில் 62 பேர்வரையில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆயர்படுத்தப்பட்டதாக நேற்று இடம் பெற்ற வாராந்த் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9 பொலிஸ் நிலையங்களை உள்ளடக்கிய யாழ். பிராந்திய பொலிஸ் பிரிவில் அடித்து துன்புறுத்திய 27 பேரும் சந்தேகத்தின் பேரில் 4 பேரும், வாகன விபத்தின்போது 3 பேரும் மது அருந்திவிட்டு குழப்பம் விளைவித்த ஒருவரும் பிடியாணை பிறப் பிக்கப்பட்ட 15 பேரும் குடிபோதையில் வாகனம் செலுத்தியதில் 2பேரும் களவு தொடர்பில் 8 பேரும் பொது இடங்களில் மது அருந்தியமைக்காக 2 பேரும் கலகம் விளைவித்தமைக்காக 14பேரும் மோசடி தொடர்பில் 4 பேரும் சூழலை மாசடையச் செய்தமைக்காக 4பேரும் ஏனைய காரணங்களுக்காக 9பேரும் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் ஒருவரும் கஞ்சா கடத்தல் தொடர்பில் 6பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எட்டு பொலிஸ் நிலையங்களை உள்ளடக்கிய காங்கேசன்துறை பொலிஸ்பிரிவில் கடந்த வாரத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 7பேரும், சந்தேகத்தின் பேரின் 11பேரும் ஏனைய காரணங்களுக்காக 44பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த வாரத்தில் இவ்வாறு 17போலிஸ் நிலையங்கள் உள்ளடக்கிய யாழ். பிராந்திய பொலிஸாரின் அறிக்கையின் பிரகாரம் 162 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக இப்பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வீதி விபத்தில் இருவர் பலி

மஹரகம, அருவ்வெல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். இரு மோட்டார் வாகனங்கள் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தின்போது மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றையநபர் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசா லைக்கு எடுத்துச் சென்றதன் பின்னர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர்கள் பிலியந்தலையைச் சேர்ந்த 19 மற்றும் 37 வயதானவர்கள் என தெரியவந்துள்ளது. கெப் வாகன சாரதி வாகனத்தை வீதியில் விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

## இன்று குரு பூசை

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குரு பூசை இன்று பிற்பகல் 4.30 மணிக்கு தலைவர் ஏ.வி. கணேசலிங்கம் தலைமையில் ஆனைக்கோட்டை மூத்த நைனார் ஆலயமண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் சிறப்புரையை ஓய்வுபெற்ற ஆசிரியர் வே. தம்பாப்பிள்ளை நிகழ்த்துவார் நன்றியுரையை செயலாளர் மு. சண்முகம் நிகழ்த்துவார். (104)

## மரணித்த ஊடகவியலாளர்களுக்கு யாழில் சுடர் ஏற்றி அஞ்சலி



யாழில் சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு ஊயிரிழந்த ஊடகவியலாளர்களுக்கான அஞ்சலி நிகழ்வு ஒன்று நேற்று காலை 11 மணியளவில் நடைபெற்றது. யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் யாழில் உள்ள பல ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு உயிர் நீத்த ஊடகவியலாளர்களுக்கு மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இலங்கை பத்திரிக்கை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுகுமார் ரொக்வூட், முறைப்பாட்டு ஆணைக் குழுவின் முறைப்பாட்டு உத்தியோகஸ்தர் எம்.எஸ்.அமீர் ஹீசைன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்

அதேசமயம் ஊடக அமையத்தினால் ஐந்து கோரிக்கைகளை வலியுறுத்தி அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

## வெளிவிவகார அமைச்சருடன் தாய்லாந்து பிரதிப்பிரதமர் சந்திப்பு

(கொழும்பு)

கொழும்பு வந்துள்ள தாய்லாந்தின் பிரதிப் பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான சுராபொங் டொச்சி-ச்சக்-ச்சாய்க்குல் மற்றும் வெளிவிவகார அமைச்சர் போராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரிடையே நேற்று சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பு குறித்து கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் இந்த வருடத்தில் கைத்தொழில், முதலீடு மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளை முறையான திட்டங்களின் ஊடாக முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்வதனை சவாலாக ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

## தெங்கு அபிவிருத்தி ஆரம்ப நிகழ்வு

வடமாகாணத்தில் தெற்கு அபிவிருத்தி தொடர்பான ஆரம்ப நிகழ்வு ஒன்று தென்மராட்சி வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு அருகில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 10.00 மணிக்கு இந்த ஆலயத்தின் தெற்குப்புறமாகவுள்ள தென்னங்காணியில் நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தெங்கு மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஏ.பி. ஜெகத்புஸ்பகுமார வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உட்பட முக்கிய அதிதிகள் கலந்து கொள்கின்றனர். (130)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.